தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : ௫௮ மலர் : ௩

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

THANJAVUR 24

திருவள்ளுவர் யாண்டு: உ௲க௩, – துந்துபி ஆனி
(1982 ஜூன் – ஜூலை)

MALLIKA ARTS TJ

பொழிற்றொண்டர்
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர்: ருசு]　　　　[மலர்: ந

உள்ளுறை:　　　　பக்கம்

1 கூடலூர் அழகர் கோயில் ... 97
—இராஜ். பவுன்துரை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2 காதல் தலைவியரும் காக்கைப் பாடினேரும் ... 104
—டாக்டர் த. சு. குப்புசாமி, எம். ஏ; பிஎச். டி.,
இந்தித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

3 கீழ்க் கணக்கில் சில புதிய .... — 112
—டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

4 நூன்மரபு இயல் விளக்கம் — 117
—வை. தங்கமணி, எம். ஏ.,
டி. கே. என். மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம்.

5 அறிஞரை மயக்கிய ... — 122
—பேராசிரியர் ச. பாலசுந்தரம்
கரந்தைப் புலவர் கல்லூரி

6 கவிதைப் போட்டி ... 136

7 விஞ-விடை ... 139

8 சோழர் காலத்தில் சில புதிய 143
—கு. அழகேசன், எம். ஏ., எம். ஃபில்.,
ஆயுநர், தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருசு	திருவள்ளுவர் யாண்டு உ௲கங துந்துபி—ஆனி 1982 சூன்—சூலை	மலர் ௩

தமிழ் வாழ்க

கூடலூர் அழகர் கோயில்

—இராசு. பவுன்துரை

கூடலூர் :

கூடலூர்— மிகப் பழமையான ஊராகும். இவ்வூர், 'கூடலூர் நாடு' என்றும் அழைக்கப்படும்.[1] இதனருகில் 'அழநாடு' எனும் வளமுடைய பகுதியும் உண்டு.[2] இப்பகுதி 'தேவாரம்' என்று அழைக்கப்படுகின்றது. கூடலூரின் மேற்குப் பகுதி சேர நாட்டின் எல்லையையும், வடக்குப் பகுதி கொங்கு நாட்டின் எல்லையையும், கிழக்கே சுருளி மலையையும் கொண்ட இடமாகும். மங்கலதேவி கோட்டம் இவ்வூரைச் சார்ந்தது. இதனைக் கண்ணகிக் கோட்டம் என்பர். சேரன் செங்குட்டுவன் முதல் பிற்காலப் பாண்டியர், நாயக்கர் வரை இவ்விடத்தில் தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளனர். எனவே கூடலூர் வரலாற்று முக்கியமான ஓர் இடமாகக் காட்சியளிக்கின்றது.

ஆறுகள் கூடுந் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் பண்டைத் தமிழர் கொண்டாடினர். அவற்றைக் 'கூடல்' என்று அழைத்தனர். மூன்று நதிகள் சேருமிடம் 'முக்கூடல்' என்றும், இரு நதிகள் சேருமிடம் 'கூடல்' என்றும் அழைக்கப் பட்டன.

தொண்டை நாட்டில் பாலாறும், சேயாறும், கம்பையாறும் சேருகின்ற இடத்தில் அமைந்த ஊர் திருமுக்கூடல் என்று

அழைக்கப்படுகின்றது. நெல்லையில் தாமிரவருணியும், சித்திரா நதியும், கோதண்டராம நதி என்ற கயத்தாறும் ஒன்று சேர்கின்ற இடம் முக்கூடல் என்று அழைக்கப்பட்டது. முக்கூடற் பள்ளு எனும் சிறந்த நாடகம் இவ்வூரைப் பற்றி எழுந்ததே யாகும்.

சோழ நாட்டில் கெடில நதியும் உப்பனாரும் கலக்கின்ற இடத்திற்கு அருகேயமைந்த ஊர் கூடலூர் என்று அழைக்கப் பெற்றது. துங்கையும் பத்திரையும் சேர்ந்து துங்கபத்திரை என்று பெயர் பெறும் இடத்தில் அமைந்த ஊருக்குக் 'கூடலி' என்று பெயர்.[3]

எனவே, சுருளியாறும் பெரியாறும் சேரும் இடமாய் அமைந்துள்ளதால் இது 'கூடல்' என்று அழைக்கப்பட்டது என்பது தெளிவு.[4]

'கூடல்' என்பதற்கு அடர்த்தியான தோப்பு நிறைந்த பகுதி அல்லது சோலை என்பது பொருளாகும். இது திருமாலுடைய கோவிலாக உள்ளதால் இதனைத் 'திருமாலிருஞ்சோலை' என்றும் கூறுவர்.[5] நாயக்கர்களுடைய காலத்தில் இத்தகைய திருமாலிருஞ் சோலைகள் அமைந்தன.

கல்வெட்டு:

இக்கோயிலின் மேற்குப் பகுதியில் ஒரு கல்வெட்டுத் தூண் நிறுத்தப்பட்டுள்ளது.[6]

> "... ... நயினர் குலசேகரப் பெருமாள் கூடலூரில் நான்ங் கெல்கைக்கு உட்பட்ட நிலத்தில் முடுக்கு வயல் தீர்த்தியாவது வரட்டாத்துக்கு மேர்க்கு ரங்காலரேவு சுருளியாத்துக்குப் போறவாய்க் காலுக்குக் கிழக்கு முடுக்குவயல் எல்லேக்கு கல்லுக்கும் மேற்படி கிளக்கோடிய வாய்க்காலுக்கும் தெற்கு இன்னுன்ங்கு சதுரத்திற்க்குள் பட்ட நிலத்தில் நெடுமாக்கல்ப் பணிக்கர்க்கு விட்ட நிலம் 30 குழிக்கு வயல் 46-ம் போக நீக்கி உண்ட ரன நிலத்தில் மங்கலாதே வியம்மன் பூசைக்கு விட்ட நிலம் 15 குழியும் அழகர் கோ விலுக்கு விட்டநிலம் 60 குழியும் வன் மீக நாத சாமிக்கு விட்ட,

நிலம் 10 குழியும் பெரியாற்று சாத்தாவின் பூசைக்கு விட்ட நிலம் 15 குழியும் மேற்படி கோவில் பிராமண போஜனத்திற்கு விட்ட நிலம் 20 குழியும் பூனையாற்று சாத்தாவின் கோவிலுக்கு விட்ட நிலம் 25 குழியும் நடைக் கல் பகவதிக்கு விட்ட நிலம் 5 குழியும் ... ...''

என எழுதப்பட்டுள்ளது. இதில் 'மங்கலதேவி' கோட்டம் கூறப் பட்டுள்ளது. இது மிகப் பழமையான கண்ணகி கோயிலைக் குறிக் கின்றது. இக்கல்வெட்டு, கூறுகின்ற 'நெடுமாக்கல்', 'மங்கல தேவி' ஆகிய சொற்றொடர்கள் சிலப்பதிகாரத்தை நினைவுறுத்து கின்றன.

காலம்:

இக் கோயில் கல்வெட்டு ஒன்று [7] 'குலசேகரப் பெருமாள்' என்று குறிக்கின்றது. 'குலசேகரன்' எனும் பிற்காலப் பாண்டிய மன்னருடைய கல்வெட்டு இது எனலாம். ஸ்ரீ வல்லபன் என்ற குலசேகர மன்னனுடைய காலத்தில்தான் பாண்டிய நாடு ஒன்று சேர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[8] எனவே, இவன் இருண்ட கால மீட்ட ஸ்ரீ வல்லபன் எனப்பட்டான், இம்மன்னனே தென்காசிக் கோயிலின் கோபுரத்தை கட்டி முடித்தவன்.[9] இம் மன்னனுடைய காலம் கி. பி. 1534 என்பதால் இக்கோயில் பிற் காலப் பாண்டியரால் கட்டப்பட்டது எனலாம்.

இக்கோயிலின் அருகே ஒரு சிவன் கோயில் உள்ளது. அதில் .'வாணாதிராயன் சேவை'' எனும் கல்வெட்டு ஒன்று உள் ளது. நாயக்க வம்சத்தைச் சார்ந்த இம்மன்னனுடைய காலம் கி. பி. 1410 ஆகும். வைணவத்தில் அதிக ஈடுபாடு செலுத்தி னாலும் பல சிவன் கோயில்களையும் அமைத்தான் என்று கூறப் படுவதிலிருந்து இக்கோயில் கி. பி. பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

கோயில் அமைப்பு:

கூடலூர் அழகர் கோயில் தோப்புகள் நிறைந்த இயற்கை அழகு சூழ்ந்த இடத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இங்குப் பள்ளி கொண்டுள்ள பெருமாளுக்குப் 'கூடலழகர்' எனப் பெயரும் உண்டு.

மகா மண்டபம், அர்த்த மண்டபம், அக நாழிகை என அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கோவிலாக அமைக்கப்பட்டுள்ளது. உயரமான கொடிக்கம்பமும் அதனை அடுத்தாற்போல் பலிபீடமும், கருட வாகனமும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் வெளிப் பிரகாரத்தைச் சுற்றிப் பெரிய சுவர் எழுப்பப் பட்டுள்ளது.

மகா மண்டபம்:

மகா மண்டபத்திற்கு உள்ளே செல்வதற்குத் தென் புறத்திலும் இரண்டு பாதைகள் உள்ளன. அவற்றில், யானைமுகங் கொண்ட அழகிய சிற்பங்களை உடைய பக்கச் சுவர் அமைக்கப் பட்டுள்ளது. இம்மண்டபத்தில் பன்னிரண்டு தூண்கள் அமைக்கப் பட்டுள்ளன.

மகா மண்டபத்தில் அழகிய வேலைப்பாடு கொண்ட வியாழ வரிசை அமைக்கப்பட்டுள்ளது. இதிலிரண்டு துதியாளி வகையைச் சார்ந்தது எனலாம். பாம்பின் முகம், சிங்கத்தின் உடல் அமைப்பும் சேர்ந்த கற்பனை வடிவே யாளி என அழைக்கப்படும். துதி யாளி எனப்படுவது வியாழ முகத்தில் யானையின் துதிக்கையினையும், தந்தத்தினையும் இணைத்து வடிக்கப்பட்ட வடிவமே. மேலும், இவ்வுருவம் சிம்மத்தின் பற்களையும், புலியின் நகங்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டு இருக்கும். யாளிகள்ல் துதியாளியே மிகச் சிறந்த வடிவழகு கொண்டதாகும்.[11] இக்கலையானது நாயக்கர்களுடைய கலைப் படைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இன்றும் நிலைத்து நிற்கின்றது. பிற தூண்களில் அணிகளால் அலங்காரமும், சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப் பட்டுள்ளன.

தூணும் அதனுடைய பொதிகையின் அமைப்பும் மரமும் அதன் கிளைகளுடன் கூடிய கனியும் போல் அமைக்கப்பட்டுள்ளன என்பர்.[12] இங்கு அமைக்கப்பட்டுள்ள பொதிகையில் ஒரு கிளி யானது கனியைக் கொத்துவதுபோன்று அமைக்கப்பட்டுள்ளது. கிளியினைத் தலைகீழாய் அமைத்து வடிக்கப்பட்டிருக்கும் பாங்கு போற்றக் கூடிய ஒன்றாகும்.

மகா மண்டபத்தில் நீண்ட கற்களால் வேய்ந்தகூரை அமைக்கப் பட்டுள்ளது அப்பகுதியின் நடுவில் பன்னிரண்டு இராசிகளின் உருவங்களையும் சிற்பங்களாக வடித்துள்ளனர், இது விசய நகர நாயக்கர்களுடைய மிகச் சிறந்த கலைப் படைப்பாகும். இக்கலைப் படைப்பானது கி பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து அமைக்கப் பட்டு வந்துள்ளது[13] மேல் பகுதியின் சுற்றுப் புறத்தில் பல

அழகிய சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. சிவன், முருகன், தேவதைகள், மன்மதன், ரதி. குறவன், குறத்தி. நடன மகளிர், வேடன், இந்திரன் போன்ற சிற்பங்கள் கலை அழகு உடையன

குறவன், குறத்தி சிற்பங்கள் இல்லாத நாயக்கர் கால கோயில்களே இல்லை எனலாம். அவ்வாறே மன்மதன், ரதி ஆகியோரின் சிற்பங்களும் அமைத்தனர். மன்மதன் ரதியின் சிற்பங்கள் நாயக்கர் காலத்தில் அதிகமாகக் காணக்கிடக்கின்றன. தென்காசி நாயக்கர்கள் இந்திரனுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அன்ன வாகனத்தில் கரும்பு வில் ஏந்தி அமர்ந்த நிலையில் ரதியுடன் மன்மதன் இருக்கும் சிற்பங்கள் அழகுடையன.

இம் மண்டபத்தின் மேற்பகுதியின் வெளிப்பகுதி அழகிய வேலைப்பாடு கொண்ட கொடுங்கை அமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற சிறந்த கொடுங்கைகளைச் சோழர் காலக் கட்டிடங்களில் காணலாம்.

அர்த்த மண்டபமும்,
அக நாழிகையும் :

மகா மண்டபத்தை அடுத்தாற்போல அமைந்துள்ள அர்த்த மண்டபம் ஆறு தூண்களுடன் கூடியது. பொதுவாக அதிக வேலைப்பாடு கொண்ட அமைப்பு இல்லை. இம்மண்டபத்தின் இரண்டு சன்னல்கள் சிறப்புடையன. கல்லால் மிகு நுணுக்கமாக வடிக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்தினை அடுத்து அமைந்துள்ள அகநாழிகை திருச்சுற்றுகளுடன் கூடிய அமைப்பைக் கொண்டது. திருச்சுற்றைக் கடந்து அமைக்கப்பட்டுள்ள அக நாழிகையில் கூடலழகரின் அழகிய திருமேனி அமைக்கப்பட்டுள்ளது. அருகில் மிக நேர்த்தியான தேவியரின் படிமங்கள் உள்ளன. அவை மிகச் சிறப்புடைய செப்புப் படிமங்கள் எனலாம். குலசேகர ஆழ்வாருடைய செப்புத் திருமேனி ஒன்றும் இங்கு உள்ளது. அகநாழிகையின் கட்டிட அமைப்பானது உபாதம், பத்மம், குமுதம், வேதிகை, உதிரம், கபோதம், யாளம் அல்லது யாளிவரி என்ற முறையில் அக்கட்டிடப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுப்புறப் பகுதியில் அழகிய மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது அரைத் தூண்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

விமானம்:

கூடல் அழகர் கோயிலின் அழகிற்குப் புகழ்சேர்ப்பது விமான மாகும். இது மூன்று அடுக்குத் தொடரைக்கொண்ட விமானமாகும். இதில் அழகிய சுதைச் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இராமா யணக் கதையை சித்தரிக்கும் சிற்பங்களாய் உள்ளன. கோயிலின் மேல்பகுதியின் ஓரங்களில் இவ்வழகிய சிற்பங்கள் காணப்படு கின்றன. இந்த விமானத்தின் நிழல் அதனுடைய விமானத்தி லேயே விழும்படியாக அமைக்கப்பட்டுள்ளமை போற்றக் கூடியது. இத்தகைய அமைப்பினை நாயக்கர்களுடைய படைப்பில் காண லாம்.

கட்டிடக் கலை, சிற்பங்கள் போன்ற அமைப்பைக் காணும் பொழுது நாயக்கர் கட்டிடக் கலையின் பாங்கு அதிகம் காணப்படு கின்றது. திருமாலிருஞ் சோலைதனை அரணாக அமைத்து நாயக்கர் காலத்தில் ஆட்சி செய்து வந்தனர். அதுபோன்றே இங்கும் காணமுடிகின்றது. கூடல் அழகர் கோயிலைச் சுற்றி 'கோட்டைமேடு' எனும் பகுதியை அமைத்துள்ளனர். இன்னும் இவ்வூரில் கோட்டை மேட்டுத் தெரு' என்றே அழைக்கின்றனர். இன்று அப்பகுதி சிதைந்து காணப்படுகிறது. சில இடங்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு கலை, கட்டிடக்கலை அமைப்பிலும், வரலாற்று முக்கியத்துவத்திலும் கூடலூர் அழகர் கோயில் சிறப்புடைய ஒன்றாக அமைந்துள்ளது.

அடிக்குறிப்பு:

1. நாகசாமி, டாக்டர், இரா., தமிழ்நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியின் அண்மைக் கண்டுபிடிப்புகள், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கு, மதுரை, 1981.
2. இராஜ். பவுன்துரை, 'மங்கலதேவி கோட்டம்' (கட்டுரை) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, 1981.
3. AR, Mysore, Vol. II, P. 459.
4. AR, No. 420 of 1907; SITI III - I, 1184.
5. MER 25 of 1890; SII Vol. IV, No. 348.
6. AR No. 420 of 1907; SITI III-I, 1184.

7. Ibid.

8. Nilakanda Sastri. K. A., The Pandya Kingdom from the Earliest Times to the Sixteenth Century; Swathi Publication. Madras-18. P. 221. 1972.

9. Ibid P. 220

10. பரந்தாமனார், அ. கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம். சென்னை-1, ப. 124, 1966.

11. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி வெளியீடு.

12. Hovell, E. B., The Ancient and Medieval Architecture of India. P. 58. 1972.

13 Rasi Mandala (The Zodiac); Subramanya Temple, Pollachi, 12th Century, A. D.

—(o)—

செயல் செய்வாய் ....

உயர் தமிழ்த்தாய் இந்நிலத்தில்
அடைகின்ற வெற்றியெலாம்
உன்றன் வெற்றி!
அயராதே! எழுந்திருநீ!
இளந்தமிழா, அறஞ்செய்வாய்!
நாமடைந்த
துயரத்தைப் பழிதன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்
செயல் செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீரி வந்தே.

—புரட்சிப் பாவலர் பாரதிதாசன்,
தமிழியக்கம்.

காதல் தலைவியரும்
காக்கைப் பாடினேரும்.

டாக்டர். த. சு. குப்புசாமி, எம், ஏ. பிஎச். டி,

இலக்கியத்தின் கருதுபொருள்களுள் பல மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையில் துளிர்ப்பவை; மிகச் சாதாரணமானவை கவிஞன் தன் கற்பனையின் தூரிகையால் விதவிதமான வண்ணந்தீட்டி எழில் கொஞ்சும் கலைப்படைப்பாக அவற்றை மாற்றி அமைக்கின்றான், சில நேரங்களில் ஒரேகருதுபொருள் வேறு வேறு புலவர்களின் வகைவகையான கைவண்ணங்கள் பெற்று வெவ்வேறு கோலங்களில் காட்சி அளிப்பதுண்டு; ஒரே புலவன் மாறுபட்ட தனது மனநிலைகளுக்கேற்ப ஒரே கருதுபொருளைப் பல்வேறு வகையாகச் சித்தரிப்பதுண்டு; சில கருதுபொருள்கள் படைப்புத்திறன் வாய்ந்த பாவலர்களால் தொடர்ந்து கையாளப்படும்பொழுது அவை படிப்படியாக மாறுதல் அடைந்து கொண்டே சென்று இறுதியில் தமது மூலப்படிவத்தினின்றுபெரிதும் வேறுபட்டு விடுவதுமுண்டு, எனவே தான், ஓர் இலக்கியப்படைப்பினை ஆய்வு செய்யும்போது அதில் எடுத்தாளப்பட்டுள்ள கருதுபொருள்களை இலக்கிய வரலாற்று அடிப்படையில் பின்னோக்கி ஆராய்ந்துகொண்டே சென்று அவற்றின் மூலப்படிவத்தைக் கண்டுபிடிப்பதும், மூலப்படிவத்திலிருந்து தொடங்கி ஒரு கருது பொருள் எவ்வாறு படிப்படியாக மாறி இன்றைய வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது என்பதை ஆராய்வதும் சிறந்த இலக்கிய ஆராய்ச்சி முறைகளுள் ஒன்றாகும் என நார்த்தராப் ஃபிரை (Nerthrp Frye), மாட் பாட்கின் (Maud Bodkin) போன்ற மேனாட்டுத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

பலநூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்து கொண்டுவரும் இந்தியமொழி இலக்கியங்களில் கருதுபொருள்களின் இத்தகு பரிணாம வளர்ச்சியினை ஆராய்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன அரசியல், மொழி போன்ற சில காரணங்களால் பண்டைய பாரத நாடு பல பிரிவுகளாகத் துண்டுபட்டுக்கிடந்திருப்பினும், சமூக அமைப்பு பொருளாதார அமைப்பு, சமயம், தத்துவம் போன்ற பண்பாட்டு அடிப்படைகளில் நோக்க பல்வேறு பகுதிகளுக்கிடையே ஒற்றுமைக்கூறுகளே மிகுதியாக இருந்து வந்துள்ளன, அதன் காரணமாக அப்பகுதிவாழ் மக்கள் தத்தம் மொழிகளில் இயற்றிய இலக்கியப் படைப்புக்களில் ஒரே மாதிரியான பல்வேறு கருத்துக்களும், கருதுபொருள்களும் இடம் பெற்றிருக்கின்றன, அவற்றைஎழுதிய புலவர்கள் அவற்றை நேரடியாகத் தம் வாழ்க்கையிலிருந்து இலக்கியத் தளத்துக்கு கொணர்ந்தனரா? அன்றிப்

பிற இலக்கியங்களிலிருந்து எடுத்து அவற்றைத் தம் நூல்களில் பொருத்திக் கொண்டனரா? அவ்வாறு எடுத்துக்கொண்டார்கள் என்றால், அதற்காக அவர்களுக்குப் பயன் பட்டவை தமது மொழி நூல்களா, பிற மொழி நூல்களா? என்பனவற்றைப் பற்றியெல்லாம் ஆய்ந்து துணிவோமென்றால், அவ்வாறு துணிவதற்குத் தேவை யான சான்றுகள் போதிய அளவுக்குக் கிடைப்பது இன்று அரிதாக இருக்கின்றது. இருப்பினும், வேறுவேறு நூற்றாண்டுகளில் பாரத நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர்கள் வேறுபட்ட தத்தம் மொழிகளில் உருவாக்கிய இலக்கியங்களுள் ஒரே கருது பொருள் சிறிது சிறிது மாறுதல்களோடு சித்தரிக்கப்பட்டிருப்பதை வரிசைப்படுத்திப் பார்க்கும்போது, ஒன்றுக்கொன்று ஏதேனும் தொடர்பு இருந்திருத்தல் கூடுமோ என்று பல வேளைகளில் மயக்கம் ஏற்படுகின்றது

எடுத்துக்காட்டாகக் காக்கைக்கு அன்னமிடும் வழக்கமும் காக்கை தொடர்ந்து கரைந்தால் அன்று அந்தவீட்டுக்கு விருந்தினர் யாரேனும் வருவர் என்னும் நம்பிக்கையும் இந்திய மக்களிடையே தொன்று தொட்டு இருந்து வருகின்றது. இவற்றைத் தான் இயற்றிய அகப்பாடல் ஒன்றில் அமைத்துப் பாடிச் சென்றுள்ளார் ‘காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்’ என்னும் சங்ககாலப் பெண்பாற் புலவர் ஒருவர். காகம் கரைந்ததனாலேயே வேற்றூர் சென்றிருந்த தன் காதலன் விரைந்து வீடு திரும்பினான் எனக் கொண்டு, இந்த உதவிக்குக் கைமாறாக அதற்கு நெய் யூற்றிப் பிசைந்த வெண்ணெல் வெண்சோற்றினை ஏழு கலங்களில் நிரப்பிப் படைத்தாலும் தகும் என்று ஒரு தலைமகள் உரைப்பதாக அமைந்தது அப்பாடல். குறுந்தொகையில் இடம் பெற்றுள்ள அப்பாடலின் அடிகள் வருமாறு;

திண்தேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
எழுகலத் தேந்தினுஞ் சிறிதென் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே

- குறுந்தொகை. 210

மற்றுமொரு சங்கப்பாடல் தலைவனோடு உடன்போக்கிற் சென்ற தலைவியது தாயின் கூற்றாக அமைந்துள்ளது. ‘உடன் போக்கிற் சென்ற என் மகள் தன் துணைவனொடு மீண்டு வரும் வண்ணம் கரைந்தாயாயின், காக்கையே; உனக்குப் பொற்கலத்தில் பச்சூன் பெய்த அமுதிட்டுப் படைப்பேன்'' என்று தலைவியின்

நற்றாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைப்பதாக அமைந்துள்ளது அந்தப்பாடல். 'ஓதலாந்தையார்' என்னும் சங்கப்புலவர் இயற்றிய அப்பாடல் ஐங்குறுநூற்றில் காணப்படுகின்றது. அதன் அடிகள் வருமாறு ;

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையோடு
அஞ்சில் ஓதியை வரைகரைந் தீமே

- *ஐங்குறு நூறு . 391*

இவ்விரு எடுத்துக்காட்டுக்களிலும் சங்க காலத் தமிழ் மக்களிடையே நிலவிய மேலே குறிப்பிட்ட பொது வழக்கமும், நம்பிக்கையும் மிக இயல்பாக அகப்பொருள் பின்னணியில் அமைத்துப் பாடப் பெற்றிருக்கின்றன. அன்றாட வாழ்க்கையில் அநுபவ பூர்வமாகத் தாம் கண்டறிந்த அப்பொது நம்பிக்கையையும் சமூக வழக்கத்தினையும் இன்ன வகையில் இலக்கியத்தில் அமைத்துப் பாடலாம் என்று வழிகாட்டுவதுபோல மிக இயற்கையாகவும் எளிமையாகவும் அமைந்துள்ளது இப்பாடலாசிரியர்களின் கற்பனைத் திறன். 'பிரிந்து சென்ற தலைமகனைக் காணத் தவிக்கும் தலைவியின் மனத் துடிப்பையும்' உடன்போக்கிற் சென்ற தன் மகளுக்காக ஏங்கும் ஒரு தாயின் அன்பு இதயத்தையும்' பயில்வோர் உணரும்படியாகப் படம்பிடித்துக் காண்பிப்பதற்குக் காக்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளனர். . இப்பாடல்களைப் பாடிய சங்கச் சான்றோர்.

இனி ஏற்கெனவே பாடப்பட்டதொரு கருதுபொருளைப் பின்னால் வந்த புலவர்களும் முன்னோர்கள் வகுத்துத் தந்த வழியிலேயே சென்று பாட முற்பட்டால், அதில் மேற்கொண்டு யாதாயினுமொரு புதுமை சேர்க்கப்படல் வேண்டும். இல்லையேல், பின்னோனுடைய பாடல் சிறக்காது: பாடினோர்க்கும் சிறப்பைத் தராது. எனவேதான், ஒரு கருத்தையோ, கருதுப்பொருளையோ பிறரிடமிருந்து இரவல் வாங்க நேரிடும்போது சில இலக்கியப் படைப்பாளிகள் வெகு திறமையாக அந்த இரவல் கருத்தினில் ஏதேனுமொரு புதுமையைச் சேர்த்து அதில் தமது சிறப்பு முத்திரையைப் பதித்து விடுகின்றனர். பொதுவாகப் புலவர்களின் இந்தப் பழக்கமே கருதுபொருள்களின் பரிணாம வளர்ச்சிக்கு மூல காரணமாக அமைகிறது எனக் கூறலாம்,

இந்த வகையில், சங்ககாலத்துக்குப் பின்னர்த் தோன்றிய தமிழ்ப் புலவர்கள் மேலே குறிப்பிட்ட காக்கைக்குப் பலியிடுதலாகிய கருதுபொருளை முன்னினும் சிறப்பித்துப் பாடல்கள் இயற்றினார்களா என்று அறுதியிட்டு கூறுவதற்கில்லை. ஆனால் தமிழகத்துக்கு வடக்கே பாகதம், சமற்கிருதம், அபபிரம்சம், இந்தி போன்ற பிற இந்திய மொழித் தனிப் பாடல்களில் இதே கருது பொருள் ' காக்கைப்பாடினியார் ' பாடியதுபோலவே அகப்பொருளின் பிரிவொழுக்கப் பின்னணியில் நுட்பமான துறை வேறுபாடுகளோடும், புதுப்புது கற்பனை நயங்களோடும் பாடப் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது. ஆனால் அவர்கள் ஓதலாந்தையார் பாடியது போன்று ' மகட்போக்கிய தாய் ' கூற்றின் பின்னனியில் இதனை அமைத்துப் பாடியதாகத் தெரியவில்லை.

கி. பி. முதலாவது நூற்றாண்டில் இயற்றப்பட்டதாக. (அல்லது தொகுக்கப் பட்டதாகக்) கருதப்படும் 'காதா சத்தசயீ' என்னும் பாகதமொழித் தொகை நூலொன்றில் தமிழ் அகப்பாடல்களைப் போன்ற சுமார் எழுநூறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றில் 'காக்கைக்குப் பலியிடுதலாகிய' கருது பொருள் தலைவனின் பிரிவைப் பின்புலமாகிக் கொண்டு படைக்கப்பட்டுளள்து ஆனால், அது காக்கைப்பாடினியார் அமைத்த துறையினின்று சற்று விலகிப் 'பிரிந்துறைந்து வந்த தலைமகள் காக்கைக்குப் பலியன்னம் படைத்தாள்' என்று தோழி கூறுவதாக வைத்துப் பாடப் பெற்றிருக்கின்றது,

இந்த நுட்பமானத் துறை வேறுபாட்டோடு. அப்பாடலில் இன்னொரு சுவையான கற்பனைநயமும் கலந்திருக்கின்றது. தலைவனைப் பிரித்து வாழும் தலைவி பிரிவாற்றுமை காரணமாக ஊன் உறக்கம் முதலியவற்றைத் துறப்பதும், அதன் காரணமாக அவளது மேனி நலிந்து மெலிவுறுவதும், உடல் மெலிவின் விளைவாக அவளது ஆடை, அணிகலன்கள் நெகிழ்ச்சியுறுவதும் உலக வழக்கு தழுவியதொரு நாடக வழக்காகும். தலைமகளின் மேனிநலிவைக் குறிப்பாகப் புலப்படுத்துவதற்கு இந்தியமொழிப்புலவர்கள் கடைப் பிடிக்கும் உத்தி மரபுகளுள் ஒன்று ' அவளது தொடியும். வளையும் கழன்று விழலாயின ' என்று மெலிவின் விளைவை மிகைப் படுத்திக் கூறுவது. இனி ' சத்தசயீப் புலவர் ' ' தலைவனைப்பிரிந்துறையும் தலைவி காக்கைக்கு அன்னமிடுதல்', அப்பொழுது ' அவளது கைவளையல் ஒன்று கழன்று விழுதல்' என மேற்கூறிய இரண்டு கருத்துக்களையும் தன் பாடலில் ஒன்றாக இணைத்து விட்டிருக்கிறார்; தொடர்ந்து, அவ்வாறு வளையல் கழன்று கிடந்த படியால் காக்கைக்கு ஏற்பட்ட மயக்கத்தையும் கற்பனைக்கண் கொண்டு

நோக்கிப் பின் அவை அத்தனையும் சுவைமிக்கதொரு சொல்லோவியமாகப் படைத்துத் தந்திருக்கின்றார். அவரது பாடல் வருமாறு;

'' காதலனின் பிரிவால் வாடி மெலிந்த தலைமகள் காக்கைக்கு அமுது படைத்தாளாக, அப்பொழுது அவளது கைவளையல் ஒன்று கழன்று சோற்று உருண்டையைச் சுற்றி வட்டமாக விழுந்துவிட்டது; அவ்வளையலைக்கண்டு 'அது தன்னைச் சிறைப்பிடிப்பதற்காக வைக்கப்பட்ட பொறி போலும்' என மயங்கிய காக்கை சோற்றுக் கவளத்துக்கு அருகில் வரவும் தயங்குகின்றது''.

'பிரிவு' என்னும் இதே அகப்பொருள் பின்னணியில் காக்கை கரைவதாகவும் அதனைப் பிரிவுத் தலைவி கேட்பதாகவும் அமைத்துப் பின்னர் அத்துடன் வேறு சில சிறப்பு அம்சங்களையும் இணைத்து அழகியதொரு நாடகக் காட்சியினைப் புதிதாக உருவாக்கியுள்ளார் அபபிரம்ச மொழிப் புலவர் ஒருவர். அவருடைய பாடல் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஹேமசந்திரர் என்பவரின் அபபிரம்சமொழி இலக்கண நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றது. பாடல் வருமாறு:

''காக்கை பலமுறை கரைந்தும் வேற்றூர் சென்றிருந்த தலைவன் வராமற் போனதால் ஆத்திரம் கொண்ட தலைவி கையை ஓங்கி வீசி அதனை விரட்டும் வேலையில் தலைமகன் எதிரே தென்பட்டு விடவே, அவளது கையிலிருந்த பாதி வலையல்கள் கழன்று தரையில் விழுந்து நொறுங்கின; எஞ்சியவை தாமாகத் தெறித்து உதிர்ந்தன.''

'காக்கை கரைந்தால் விருந்தினர் (ஈண்டுத் 'தலைமகன் வருவர்') என்ற நம்பிக்கையாகிய கருதுபொருளும், பிரிவால் வாடிய தலைவியின் கரங்களிலிருந்து வளையல்கள் நெகிழ்ந்து விழுதல், ஆகிய மரபுவழிக் கருத்தும் முந்திய பாடல்களுள் இருந்தன போன்றே இப்பாடலிலும் இடம் பெற்றுள்ளன; ஆனல் பாடல் பின்னணியின் சூழமைதியில் சிறிதளவு மாற்றம்காணப்படுகின்றது. காக்கை கரைந்து தலைமகன் உண்மையாகவே வந்து விட்டால் காக்கை பாடினியாரின் தலைமகள் கூறியதுபோல அப்பறவைக்குப் பெருவிருந்து படைத்து விடலாம், ஒரு வேளை அவன் வரவில்லையென்றால் ...? அதனல் தலைவிக்கு எவ்வளவு ஆத்திரம் ஏற்படும் என்பதை இப்பாடலாசிரியரின் உள்ளம் சிந்தித்துப் பார்த்து அதனையே ஓர் ஆக்கக் கற்பனையாக — சொற்சித்திரமாகப் பாடலில் வடித்துத் தந்திருக்கின்றது.

மேலும், தலைவி தன் ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அந்த வேளையில் திடீரெனத் தலைமகன் அவள் முன் தோன்றிவிட்டால் அவளது மனநிலை எப்படி இருக்கும், அதனுல் அவனுக்கு எத்துணை மகிழ்ச்சி ஏற்படும் என்பதை இப்பாடலாசிரியர் கற்பனை செய்து பார்த்துள்ளார். அக்கற்பனைதான், எஞ்சிய வலையல்கள் தாமாகத் தெறித்து வீழ்வதற்குக் காரணமாகியது. வருத்தம் காரணமாக உடல் மெலிவது போலவே, மிகுத்த உவகையின் விளைவாக அங்கங்கள் பூரிப்பதும் உண்டு. மேனி மெலிந்தால் ஆடையணிகள் நெகிழ்ச்சி யுறுவது போன்று, மித மிஞ்சிய உடல் பூரிப்பால் அவை இறுக்கமடைந்து சிதைவுறுவதும் உண்டு' இந்த எளிய உண்மையையே மிகப்படுத்தி மகிழ்ச்சிக்கான காரணமும், மகிழ்ச்சியும் அகமகிழ்வால் நேரிட்ட உடல் பூரிப்பும் பூரிப்பால் விளைந்த ஆடையணிகலின் இறுக்கமும், அவற்றின் சிதைவும் ஆகிய அனைத்தும் ஒருசேர நிகழ்ந்தனவாகப் புனைந்துரைப்பது ஓர் இந்திய இலக்கிய மரபாகும். அம்மரபினைத்தான் இப்புலவர் தமது பாடலின் இறுதியில் நயம்படக் கோத்திருக்கின்ருர்.

தலைவியின் கரத்தை அணிசெய்யும் வலையல்களில் பாதி கழன்று நிலஞ்சேர்வதும், மீதமுள்ளவை தெறித்து நொறுங்குவதுமாகிய இக்கருத்து 'சொக்கநாதப் புலவர்' என்னும் இடைக்காலத் தமிழ்ப் புலவர் இயற்றிய தனிப்பாடல் ஒன்றிலும் இடம்பெற்றுள்ளது. அப்பாடலும் 'பிரிவு' பற்றியதே; ஆயினும், அதன் துறை மேற்கூறிய அபபிரம்சப் பாடலின் துறையினின்று சற்று மாறுபட்டிருக்கின்றது. தலைவன் செலவுணர்த்தியதும் தலைமகளின் கைவளையல்கள் கழன்று விழலாயின; அதுகண்ட அவன், செலவழுங்கினேன் என்று கூறிய மாத்திரத்தில் எஞ்சியிருந்த வளையல்கள் உடைந்து விழுந்தன என்று உரைக்கின்ருர் தமிழ்ப் புலவர்:

நங்கை பயண நமக்கென்றுரைத்தளவில்
அங்கம் படலை நிறமானதே-செங்கை
வளை நெகிழப் பாதி மறுத்தே னென்ருேத
வளை நெகிழப் பாதி யுடைந்து

(தனிப்பாடல் திரட்டு, முதற்பாகம், சொக்கநாதப் புலவர், பா. எண். 35)

மேலே குறிப்பிட்ட அபபிரம்ச மொழிப் பாடலில் வந்துள்ள பொருள் ஓர் அழகான புதிய திருப்பம் பெற்று கி. பி. 18-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த 'தேவதத்தர்' என்னும் இந்தி மொழிப் புலவரின் பாடல் ஒன்றில் காணப்படுகின்றது.

''பிரிவைத் தாங்கமாட்டாது துயரக் கடலில் உருகி நலிந்து கொண்டிருந்தால் அந்த மங்கை. புயலாலும், மழையாலும் சிதைவுறும் சருகே போலும் தனதுயிரைக் காதல் நினைவுகளால் ஒரு வழியாக இன்றுவரை பாதுகாத்து வந்தாள். ஆனல், மீண்டு வருவதாகக் குறித்து சென்ற நாளாகிய இன்றும் அவன் வாராது காலங் கடத்தலே அவள் பொறுமை யிழந்தவளாய் விசும்பத் தொடங்கினள். வெகு நேரமாகக் கரைந்து கொண்டிருந்த காக்கையின் மீது அவளுக்குச் சொல்லொணு வெறுப்பும், ஆத்திரமும் பொங்கியது. அதைத் துரத்துவதற்காகக் கையை ஓங்கி வீசினள். வீசவே, அவளுடைய கை வளையல்கள் நான்கு கழன்று சென்று காக்கையின் கழுத்தில் மாலையாக விழுந்தன.

இப்பாடல் கருத்துக்களில் இறுதி கற்பனை ஒன்றையொழித்து ஏனையவை அனைத்தும் மரபு வழியாகத் தொன்று தொட்டு வந்து கொண்டிருந்தனவே என்பது கூருமலேயே விளங்கும். மரபுவழிக் கருத்துக்களையே அடியொற்றிப் பாடலின் பெரும்பகுதியை உரு வாக்கிய இதன் ஆசிரியர் அதன் முடிவில் ஓர் அழகிய கற்பனைக் காட்சியைப் புனைந்து தனது கலைத்திறனின் முத்திரையை அதில் பதித்து விட்டிருக்கின்ருர். பாடல் முழுமைக்கும் பொலிவும், கவர்ச்சியும் தந்து அதன் வனப்புக்கு உயிர் நாடியாகத் திகழ்வது 'காகத்தை விரட்டுவதற்காகத் தலைமகள் கையை வீச, அவள் கையிலிருந்த நான்கு வலையல்கள் கழன்று சென்று அதன் கழுத்தில் மாலையாக வீழ்ந்தன' என்னும் ஈற்றடியே·

இந்திய மக்களின் அன்ருட வாழ்க்கையில் பெறப்படும் ஒரு சாதாரண நிகழ்ச்சி-யாகிய காக்கை கரைதலைக் கருது பொருளாகக் கொண்டு அதனைக் கவிஞர்கள் தமது பாடல்களில் எவ்வாறெல்லாம் சுவைபடப் புனைந்துள்ளார்கள் என்பதையே மேற்சுட்டிய எடுத்துக் காட்டுக்கள் விளக்குகின்றன. அத்தோடு, எல்லாப் பாடல்களும் தனிப்பாடல்களாகவும், காதல் வாழ்வில் நிகழும் பிரிவினைப் பின் புலமாகக் கொண்டதாகவும், தலைமக்களோடு நேரடித் தொடர்புடையதாகவும் இருப்பதைப் பார்க்கும்போது அவை அனைத்தும் ஏதோ ஒரு கட்டமைப்பினைப் பின்பற்றி எழுதப்பட்டவை என்ற எண்ணமும் பிறக்கின்றது. இப்பொது அமைப்பினை நிலைக்களனகக் கொண்டு முதலில் ஒருவர் செய்யுள் இயற்றப் பின்னல் வந்தவர்கள் பாடலில் அடிப்படை அமைப்பில் மாற்றங்கள் ஏதும் செய்யாமல், அதன் பொருளில் மட்டும் சிற்சில மாறுதல்களும் புதுமைகளும் செய்து அதனை முன்னிலும் அழகுபடுத்தியிருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இனிக் காக்கை பாடினியாரின் பாடலில் காக்கை கரைதலாகிய கருது பொருள் மிக இயல்பாகவும், எளிமையாகவும், நடைமுறை வாழ்க்கையொடு ஒட்டியும் அமைந்திருக்க மற்றைய பாடல்களில் அக் கருதுபொருளொடு கவிஞனின் ஆக்கத்திறனும், கற்பனை நயமும் சிறந்து கலைப்பண்பும், செயற்கையெழிலும் மிளிரக் காண்கிறோம். இதைக் கொண்டு, தமிழ்ப்பாடலில் கருது பொருளின் ஆரம்பக் கட்டம் அல்லது தொடக்கநிலை இருப்பதாகவும் ஏனைய பாடல்கள் அதன் வெவ்வேறு வளர்ச்சிநிலைகளைக் காண்பிப்பதாகவும் நினைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அதுமட்டுமல்லாது மேற்கூறிய பாடல்களின் கட்டமைப்பினை முதன்முதலில் வடித்துத் தந்த பெருமையும் தமிழையே சாரும் என்று துணிவதற்கும் இட மேற்படுகின்றது. தமிழுலகில் இவற்றைப் பற்றியெல்லாம் விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

தொண்டு என்னுஞ் சொல்

தொண்டு என்னுஞ் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது. அவர் காலத்திற்கு முன் தொண்டு, தொண்பது தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன முறையே 9, 90, 900, 9000 என்னும் எண்களைக் குறிக்கும் பெயர்களாயிருந்தன. 'தொண்டு' என்னும் ஒன்றுமிடப் பெயர் வழக்கறவே, தொண்பது என்னும் பத்தாமிடப்பெயர் ஒன்றுமிடத்திற்கும், தொண்ணூறு என்னும் நூறுமிடப் பெயர் பத்தா மிடத்திற்கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரமா மிடப்பெயர் நூருமிடத்திற்குமாக வழங்கத் தலைப்பட்டன. தொண்பது என்னும் பெயர் முறையே தொன்பது ஒன்பது என மருவிற்று. ஆயிரமாமிடப்பெயர் நூருமிடத்திற்குமாக வழங்கவே, 9000 என்னும் எண்ணைக் குறிக்க ஒன்பது என்னும் பெயருடன் ஆயிரம் என்னும் பெயரைச் சேர்க்க வேண்டியதாயிற்று. முதற் பத்து எண்ணுப் பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர, மற்றவையெல்லாம் ஒரு சொல்லாயிருப்பதையும், ஒன்பது என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும் தொண்ணூறு என்பது நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது ஆயிரம் என்றும் முடிவதையும் நோக்குக. .... ஆகவே தொண்டு + பத்து = தொண்பது, தொண்டு + நூறு = தொண்ணூறு, தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப்பெயர் வழக்கற்றதினுல் அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோரிடமாய்த் தாழ்ந்து வந்து வழங்கின என்றும் அறிந்து கொள்க.

—ஞா. தேவநேயப் பாவாணர்

கீழ்க் கணக்கில்சில புதிய இடைச் சொற்கள்

டாக்டர். ஏ ஆதித்தன் .

தொல்சாப்பியர் இடைச் சொற்களின் இலக்கணத்தை யும் (தொ, சொ. 159,249.) வருகை நிலையினையும் (தொ. சொ. 251) பாகுபாட்டினையும் (தொ, சொ, 250)இடையியலின் கண் சுட்டுகின்றார்.

தொல்காப்பியர் கூறும் எழுவகை இடைச்சொற்களில் வேற்றுமை உருபு' கால இடைநிலைகள், சாரியைகள் என்னும் மூன்றையும் ஒட்டுக்கள் (Affiexes) எனவும் ஏனைய நான்கனை யும் ஒருநிலைச் சொற்கள் (Particles) எனவும் பாகுபாடு செய்வர் மொழியியல் அறிஞர் (மோ.இசரயேல், 1973. பக். 257) .

தொல்காப்பியர் இடையியலின் கண் சுட்டும் இடைச்சொற்கள் தவிர்ந்த கீழ்கணக்கில் பயின்று வரும் புதிய இடைச்சொற்கள் பற்றிய செய்தியினைக் கூறுவதே இக்கட்டுரை;

அ- இணைப்பிகள் (connectors)

ஈண்டு குறிப்பிடப் பெறும் வடிவங்கள் அனைத்தும் பொருண்மை நிலையில் தனித்து விளங்காதவாகி இடைச் சொல்லுக் குரிய அனைத்துப்பண்புகவையும் பெற்று வருகின்றன. தொல் காப்பியரும் 'என்', 'என்று' போன்ற இணைப்பிகளை இடைச் சொற்களாகவே காட்டுகின்றார். இத்தன்மைத்தாம் சொற்கள் ஈண்டு இடைச்சொற்களின் பாலனவைகளாக குறிக்கப் பெருகின் றன· இணைப்பிகளாகச் செயலாற்றும் ஒருநிலைச் சொற்கள் பெரும்பான்மையும், வினைஎச்ச அமைப்பினைக் கொண்டுள்ளன.

1. - ஆ:

யாமாப் பிரிவதிலம் (ஐந்திணை எழுபது 4:1)

2, – ஆன;

தத்துவமான நெறி (நான்மணிக் கடிகை 30:3)

3. . ஆயின்:

சிறிதாயின் (நாலடியார், 38: 3)

4. - ஆனும் :

என்னானும் (நாலடியார், 5: 1)

5. - ஆகலான்:

அரிதாகலான்(ஆசாரக்கோவை 65:3)

6, - எனின் :

கூழ் எனின் (நாலடியார் 1:3)

இவ்வறுவகை இடைச் சொற்களின் பாலவை தொல்காப்பிய மொழியிழும் காணக் கிடக்கின்றது.

7. - ஆகவே :

நீ ஆகவே வா (திணைமாலை நூற்றைம்பது 43,3)

8. - ஆதலால் :

ஆதலால் வாராது (திணைமாலை நூற்றைம்பது37:3)

9. - ஆயில்:

உளர் ஆயில்(திணைமாலை நுற்றைம்பது 62:4)

10. - ஆனால் :

உடம்பு ஆனால் (நாலடியார் 42:2)

11. - என் :

ஒல்லென் ஒலிபுனல் (ஐந்திணை ஐம்பது·29:1)

12, -ஏயும் :

விலங்கேயும் (பழமொழி 122:1)

13, - ஏல் :

சேவகனேல் (சிறுபஞ்சமூலம் 89:2)

14. - ஏனும் :

கார் அடங்கேனும் (நாலடியார் 217:1)

ஆ. அசை நிலைகள் (Euphonic particles)

1. ஆங்கு :

ஊடலில் உண்டாங்கு ஓர் துன்பம் (குறள் 1307.1)

2. தொறும் :

நாள் தொறும் (குறள் 553:1)

இவ்விரு வடிவங்களும் தொல்காப்பியமொழியிலும் வழங்கி வருகின்றன.

3. அங்கு :

நம்மொடு அங்கு ஓராறு செல்லுமிடத்து (ஆசாரக்கோவை 60:3)

4. அது:

திறமது தீப்பெண்டீர் தொழில் (சிறுபஞ்சமூலம் 25:4)

5· ஆதி:

பூ ஆதி வண்டு தேர்ந்து (ஏலாதி 32:3)

6, ஆல்:
சேக்குமால் (ஐந்திணை ஐம்பது 41:3)

7. ஆன் :
ஒரு தலையான் வந்ததூம் (திரிகடுகம்18:1)

8. ஐ:
இரப்பாரை இல்லாயின் (குறள் 1058:1)

9, ஒரும்:
குருந்து அரும்ப ஒரும் வருவர் (கைந்நிலை 25:2)

10. காண்:
பெருஞ்செல்வம் காண் ஈய்த்து வாழ்வார் (ஏலாதி 55:4)

11. காண்பாய்:
பட்டான் என்று இகழார் காணாய் (நாலடியய் 136:2)

12. காறும்:
இறுன் காறும் யாம் கண்டிலம் (சிறுபஞ்சமூலம் 61:4)

13. தான்:
பெருமை சிறுமைதான் குற்றமே கூறிவிடும் (980:2)

14, தொறு:
நாடு தொறு நாடி (குறள் 553:2)

15. தோறு:
தாராத்தொறு ஆய்ந்து (திணைமாலை நூற்றைம்பது 139:3)

16. தோறும்:
நாடோறும் நாடு (குறள் 520)

17. வாளா:
என் வாளா என்றி (திணைமாலை நூற்றைம்பது 99:2)

இத்தகைய இடைச்சொற்கள் மொழியில் இன்ன பொருண்மையில் கையாளப்பட்டுள்ளன என்று அறியமுடியா நிலையில் அமைந்துள்னன, உரையாசிரியர்கள் இவை இசை நிறையின் பொருட்டுக் கையாளப்பட்டுள்ளன என்பர்.

இ. குறிப்பில் பொருள் செய்வன (suggesstive particles)

1. இஃதோ:
செறிதொடீஇ கார் இஃதோ... (ஐந்திணை ஐம்பது 23:1)

2, இதோ;

ஒண்தாரன் இதோ கடலனைய வரவு கைந்நிலை (60;3)

3, ஈதோ;

தார் பூப்ப இதோ மயங்கி வான் மருங்கார் (ஐந்திணை ஐம்பது 1; 4)

குறிப்பால் பொருள் செய்யும் இடைச் சொற்கள் சூழலுக் கேற்ப ஒரு குறிப்பிட்ட குறிப்புப் பொருண்மையினைச் சுட்டு கின்றன,

ஈ வலியுறுத்தற் பொருண்மையில் வருவன (Emphatic particles)

1. தாம்;

இழிந்தவை தாம் கலந்த (நாலடியார் 259 ; 3)

2. தான்;

உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் (குறள் 785)

இவ்விரு வடிவங்களும் தொல்காப்பிய மொழியில் காணக் கிடைக்கின்றன,

உ. விளி (vocatives)

1, எல;

எல என்று (திணை மாலை நூற்றைம்பது 10;2)

2, ஏழாய்:

என் கேட்டி ஏழாய் (திணைமாலை நூற்றைம்பது 135:1)

3, ஐய:

ஐய கேள் (நாலடியார் 350 ; 2)

கேட்போர் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு எண், பால் வேறுபாடின்றி இத்தகைய இடைச் சொற்கள் பயன்படுத்தப் பெற் றுள்ளன.

ஊ. உவமச் சொற்கள் (Particles of Comparison)

காப்பியர் ஒப்பிற் வழியாற் பொருள் செய்குந (தொ. சொ. 250) என்று முப்பத்தெட்டு வடிவங்களை உவமயியலில் (தொ, பொ, 282, 283, 287) குறிப்பிடுகின்றார். இவை தவிர சில வடி வங்கள் இத்தகு பொருளில் பதினெண் கீழ்க்கணக்கில் செயலாற்று கின்றன.

1. இன்ன:

மாலையும் இன்ன அணி எல்லாம் (பழமொழி 271;4]

2, இணை:

நறுந்தாது இணை கால (திணைமொழி ஐம்பது 32:2)

3. ஆங்கு;

முறுவலார் சொல்லினிது ஆங்கினிது (இனியவை நாற்பது 1:3)

4. ஊங்கு;

அதனின் ஊங்கு இல்லை [குறள் 122:2]

5. ஏர்:

முத்தேர் முறுவலார் [இனியவை நாற்பது 1:3]

6. ஒத்த:

பால் ஒத்த வெள்ளருவி [திணைமாலை நூற்றைம்பது [19:1]

7· சேர்ந்த:

மான் சேர்ந்த நோக்கினாய் (பழமொழி 8:3)

8, நேர்:

பொன் நேர் நிறத்தாய் (கைந்நிலை 26;3]

கருவி நூற்கள்:

1. Athithan, A., The Grammar of Tolkappiyam and the language of Patinenkilkkanakku, Ph. D Dissertation, Madurai Kama raj University, 1979

2. Israel, M.. The Treatment of Morphplogy in Tolkappiyam, Madurai kamaraj University, Madurai, 1973

3. தொல்காப்பியர், தொல்காப்பியம்—எழுத்ததிகராம், சொல் லதிகாரம், பொருளதிகாரம்.

ழகரம்

ழகரம் மலேயாளத்தில் இன்றும் வழங்குகின்றது. தெலுங் கிலும் கன்னடத்திலும் மறைந்தது. பழங்கன்னடத்தில் ழகரம் இருந்தது. ஒன்பதாம் நூற்றுண்டின் கன்னடக் கல்வெட்டுக்களில் இந்த எழுத்து உள்ளது. பிறகு ரகரமாகத் திரிந்து, பன்னிரண் டாம் நூற்றுண்டுக்குப் பின் ளகரமாக எழுதப்படுவதாயிற்று.

—முனேவர் மு. வ., மொழிநூல்.

நூன்மரபு: இயல் விளக்கம்.

திருமங்கலம், வை. தங்கமணி

தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து அதில் முதல் அதிகாரத்தில் முதற்கண் நிற்பது 'நூன்மரபு' இந்த 'நூன்மரபு என்ற தலைப்பு பற்றிப் பலரும் பலவாறு ஆய்ந்து அவர் அவருக்கு ஏற்றவாறு முடிவுகட்டியுள்ளனர்,

முதற்கண் தொல்காப்பியத்துக்கு உரையாசிரியர் என்று பாராட்டப்படும் இளம்பூரணர் எவ்வாறு கூறுகின்றார் என்பதைப் பார்ப்போம்.

' அதிகாரத்தால் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தினை ஓராற்றலால் தொகுத்துணர்துதலின் 'நூல்மரபு' என்னும் பெயர்த்து என்பார்.

உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியர் 'நூற்கு மரபாம் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமையின், 'நூன்மரபு' என்னும் பெயர்த்தாயிற்று. இங்ஙனம் மூன்று அதிகாரத்திற்கும் இலக்கணம் உணர்த்தலின் இவ்வோத்து நூலினது இலக்கணம் உணர்த்திற்று' என்று கூறியதோடு அமையாது 'நூல்' என்பது பஞ்சினாலாகிய 'நூல்' போன்றது, எனவே உவமையாகு பெயர். குற்றம் நீங்கிய பஞ்சினை மகள் ஒருத்தி தூய்மையும், நுண்மையும் உடையவாகிய ஓரிழை படுத்தியமைப் போல' வழுக் கலைந்து இலக்கணங்களை எல்லாம் மாறு கோளின்றித் தொகை வகையால் உரை, அழகு, உத்தி, புணரஒரு நெறிப்படப் புணர்த்தியமையான் இப்பெயர் பெற்றது' என்று உவமையும் கூறி விளக்குவார்

மாதவ சிவஞான முனிவர் எழுத்து: குறில், நெடில், உயிர் மெய் என்ற தொடக்கத்துப் பெயர்கள் நூலின்கண் ஆளுதற் பொருட்டு முதல் நூல் ஆசிரியனாற் செய்துகொள்ளப்பட்டமையின் இவை 'நூன்மரபு' பற்றிய பெயராயின ,என அறிக' என்று தொல்காப்பிய சூத்திர விருத்தியில் கூறுவர்.

திருமிகு . வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் தாம் எழுதிய 'எழுத்ததிகார ஆராய்ச்சியில்' மொழியின் இயல்பு உணர்த்தியயியல் 'மொழிமரபு' எனப்பட்டது போல எழுத்தின் இயல்பு உணர்த்திய இயல் ,நூன்மரபு' எனப் பட்டது. நூல் என்றது ஈண்டு எழுந்தினை உணர்த்திற்று' என்றும் -மீண்டும்

'நூல்' என்பதற்கு எழுத்து என்ற பொருள் உண்டா? ஆராயப்பட வேண்டும்' என இவ்வாறு கூறுவார்:

இங்கு' நூன்மரபு ' என்ற பொருத்தத்திற்கு இளம்பூரணர் கூறுவதை நச்சினார்கினியர் ஏற்றுக் கொள்ள வில்லை. மாதவ சிவஞான முனிவர் புதுவிளக்கம் தருவார். மேலேக் கூறிய மூ வர் கூற்றினையும் திரு, வேங்கடராசலு ரெட்டியார் பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் உட்புகுந்து முற்றிலும் மாறுபட்ட விளக்கம் கூறி—கூறியதைநிலை நாட்ட முடியாமல் ஓடுகின்றார்.

எழுத்ததிகாரம் முழுமையும் சொல்லப்படும் எழுத்திலக்கணத் தினை 'நூன்பரபு' தொகுத்து உணர்த்தலின் 'நூன்மரபு. என்னும் பெயரினைக் கொண்டது என்றால் சொல்லதிகாரத்திலும் பொருள் அதிகார த்திலும் எழுத்தின் இலக்கணத்தினை உணர்த்த வில்லை என்றாகி விடுமன்றோ?

'சொல்திகாரத்தில் கிளவியாக்கதிலும், பொருளதிகாரத்தில் செய்யுளியலிலும் எழுத்திலக்கணத்தைப் பற்றிக் கூ று ம் போது எழுத்திகாரத்தில் மட்டும் எழுத்தினைப் பற்றிக் கூறுகின்றார் ' என்று உரையாசிரியர் உரைப்பது எவ்வாறு பொருந்தும்.

, நூற்கு துணையாகும் எழுத்துக்களைத் தொகுத்துக் கூறி யமையால் 'நூன்மரபு' என்றாயிற்று என்றால் கிளவிகளில் வாரத எழுத்துக்களைப் பற்றியும் கூறும் போது இக்கூற்று மாறுகொளக் கூறியது ஆகாதா?

மேலும் நச்சினார்க்னியர் ' நூல் ' என்பது பஞ்சினாலாகிய நூலைப் போன்றது ' என்றும் குற்றம் நீங்கிய பஞ்சினை மகள் ஒருத்தித் தூய்மயையும் நுண்மையும் உடையவாக்கி ஓரிழைப் படுத் தியது போல வழுக்களைந்து இலக்கணங்களை எல்லாம் தொகை வகையால் உரை, அழகு உத்தி புணர ஒருநெறிப்படப் புணர்ந்தன மையான் இப்பெயர் பெற்றது' என்றால் எழுத்துக்களிளும் குற்றம் உடைய எழுத்துக்கள் உள அவைகளை நீக்கி ஒழுங்கு படுத்தப் பட்டுள்ளது என்றாகி விடாதா?

திரு ரெட்டியார் அவர்கள் மொழியின் இயல்பு உணர்த்திய இயல் 'மொழிமரபு' என்றானதுபோல எழுத்தின் இயல்பு உணர்த் திய இயல் 'நூன்மரபு' என்றாயிற்று என்றும், நூல் என்பது ஈண்டு எழுத்தினை உணர்த்திற்று என்றும், கூறுவார். என்றால் 'நூல்' என்பதற்கு 'எழுத்து' என்ற பொருள் யாங்கு தேடினும் க ணப்படானமயான் அவர் விட்டுவிடுவதுபோல நாமும் விட்டு விடுவதே நலம்.

ஆக தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர்களுள் உரையாசிரியர் எனப் பாராட்டப்படும் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் ரெட்டியார் ஆகியோர் தரும் விளக்கங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு விளக்கம் தருபவர் மாதவ சிவஞான முனிவர் ஆவார். அன்னவர் தரும் விளக்கம் ஒருவாறு பொருந்துவது போலக் காணப்படுகிறது. எவ்வாறு.

எழுத்து. குறில்:, நெடில், உயிர், மெய் என்ற தொடக்கத்துப் பெயர்கள் பின்வரும் நூலின்கண் ஆளுதற்பொருட்டு முதல்நூல் ஆசிரியரான் செய்துகொள்ளப்பட்டமையின் இவை 'நூன்மரபு' பற்றிய பெயராயின' என்ற தொடருக்குச் சிறிது விளக்கம் கொடுப் போமேயானால் நன்கு விளங்கும்.

தொல்காப்பியர் யாத்த தொல்காப்பியத்திலுள்ள முப்பெரும் அதிகாரத்திலும் இருபத்தேளு இயல்கள் அமைத்துக்காட்டுவர். இந்த இருபத்தேழு இயல்களிலும் ஐந்து இயல்களுக்கு மட்டும் 'இயல்' என்று இணைக்காது 'மரபு' என்று சுட்டுவார், அவ்வாறு 'மரபு' என்று சுட்டுவதற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும் அல்லவா?

தொல்காப்பியரே மரபியலில்
'மரபு நிலை திரிதல் செய்யுட்கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லினான' என்றும் (மரபியல் 92)
'மரபு நிலை திரியிற் பிறிது பிறிதாகும்' என்றும் (மரபியல் 93)
'மரபு நிலை திரியா மாட்சிய யாகி
உரைபடு நூல் தாம் இரு வகை நிலைய
முதலும் வழியுமென நுதலிய நெறியின்' என்றும் (மரபியல் 95)

'மரபே தானும்
நாற் சொல்லியலான் யாப்பு வழிப்பட்டன்று என்றும்
(செய்யுளியல் 76)

'வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம் மரபினவே', (கிளவியாக்கம் ,,)
என்றும்

—செய்யுள் மரபு நிலை திரிதல் இல்லை
—அதனை மரபுவழிபட்ட சொல்லினாலேயே செய்ய வேண்டும்.
—மரபு நிலை திரிந்துவரின் பொருள் வேறு வேறாகும்.
—மரபு நூற்கு இன்றியமையாதது அத்தகு மரபுநிலை திரியாது உரைக்கப்படும் நூல்தாம் இருவகைப்படும். அவைதாம் முதல் நூல்.

வழிநூல் என்பன, என்றாலும்'
—நாற்சொல் மரபில்:
—இயற்சொல் மரபாவது, சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல்:
—திரிசொல் மரபாது, தமிழ் நாட்டகத்தும் பல்வகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு
—திசை சொல் மரபாது செந்தமிழ்ச்சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு
—வடசொல் மரபாது திரிந்த வகையாகிய சொல் மரபு என்றும்

ஒரு பாற் சொல் ஏனைய பாற் சொல்லொடு மயங்கி வருதல் கூடாது. தம்பாற் சொல்லொடு தான் தொடர்ந்து வரவேணடும் என்றும்

என்றாலும் 'மரபு' எனப்படுவது யாது!
'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' -(மாபியல்-1)
அன்றோ! பேராசிரியர் அவர்கள்;

மரபென்ற பொருண்மை என்னையெனின் கிளவியாக்கத்து 'மரபு' என்று வரையறிந்து ஓதப்பட்டனவும் செய்யுளியளில் மரபு என்று வரையறிந்து ஓதப் பட்டனவும் அன்றி இரு திணைப் பொருட்கு குணனாகிய இளமையும், ஆண்மையும், பெண்மையும் பற்றிய வரலாற்று முறையையும் உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும் அவை பற்றி வரும் உலகியல் மரபும் நூன்மரபும் என இவை யெல்லாம் மரபெனப்படும். என்று விளக்கந் தருவார்,

என்றெல்லாம் அடிக்கொரு முறை மரபு மரபு என்று காப்பியர் கூறுவதாலும் பரந்து விரிந்து செல்லும் பேராசிரியர் உரையாலும் 'மரபு' என்ற சொல்லின் பொருளை எளிமை யாகப் புரிந்து கொள்ள முயலும் போது ஒடோடி வந்து துணை நிற்கிறார்! பல்கலைக் குரிசில் பவணந்தியார் கூறும் விளக்கந்தான் என்ன? மரபுக்குத் தெளிவான விளக்கந்தான் என்ன? அவரே கூறுகிறார்.

'எப்பொருள் எச்சொலின் எவ்வாறுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல்மரபே' -என்று பொதுவியல்முப்பத்தேழாம் நூற்பாக் கூறுவார். அதற்கு:

'யாதொரு பொருளை யாதொரு சொல்லான், யாதொரு நெறியுடன் அறிவுடையோர் சொன்னார்களோ அப்பொருளை

அச்சொல்லான் அந்நெறியான் சொல்லுதல் 'மரபாம்' என்று சங்கர நமச்சிவாயர் விளக்கம் தருவார்.

'மரபு'என்பதற்கு அறிவுடையவர்கள் எவ்வாறு கூறியுள்ளார்களோ அவ்வாறே கூறவேண்டும், கொள்ளவேண்டும். ஆகையால் தான் தொல்காப்பியர் இருபத்தேழு இயல்களிலும் முதல்நூல் ஆசிரியர் கூறியதை அப்படியே கூறவேண்டிய இயல்களுக்கு 'மரபு' என்ற சொல்லை இணைத்தார். முதல்நூலாசிரியர் எப்பெயரிட்டு அழைத்தாரோ, அப்பெயரிட்டே அழைக்க வேண்டும் எ பது காப்பியரது நோக்கம் ஆகும்.

ஆகவே முதல் நூல் ஆசிரியர் எழுத்துக்களில் இவை முதல் சார்பு, உயிர் மெய், என்றும் அவைகளுக்கு மத்திரை இவ்வளவு என்றும் எண்ணிக்கை இத்துணை என்றும்' வடிவம் இவ்வாறு என்றும் அவை மயங்கும் முறை இவ்வாறு என்றும் முன்னோர் நூலின் வழியே கூறுவதால் 'மரபு' என்றும்கொள்ளப் படுவதால் இவ்வியலுக்கு 'நூன்மரபு' என்னும் பெயர் கொடுக்கப் பட்டுள்ளது என்று கொள்வது ஏற்புடைத்தாகிறது.

இக்கட்டுரைக்குத் துணை நின்ற நூல்கள்;-

1. தொல். எழுத்து. இளம்பூரணம்.
2. ,, ,, நச்சினார்க்கினியம்.
3, ,, சொல். இளம்பூரணம்.
4. ,, பொருள். சேனாவரையம்
5. ,, ,, பேராசிரியம்.
6. எழுத்ததிகார ஆராய்ச்சி, திரு. வேங்கடராசலுரெட்டி
7, நன்னூல். சங்கர நமச்சிவாயர் உரை,

→ ★—★ ←

புதன் என்னும் சொல்

புதன் என்னும் கிழமையைக் குறிக்கும் பெயர்ச்சொல் தமிழ்ச்சொல் அல்ல என்னும் கருத்தில் நூல் (இலக்கிய) வழக்கில் காணப்பெறும் அறிவன் என்னும் பெயர்ச்சொல்லினை தமிழன்பர்கள் சிலர் எடுத்தாளுவர். புலன் என்னும் சொல் அறிவு —அறிவன் என்னும் பல பொருள் குறிக்கும் ஒரு பெயர்ச்சொல். இப்யெர்ச் சொல்லின் இடையிலுள்ள லகரம் தகரமென வழக்கில் திரியும்; லகரம் தகரமாக ஒலிப்பெளிமைக்கேற்ப உலக வழக்கில் புலன் — புதன் என திரிந்து வழங்குதல் இயல்பு என்பது மொழிவரலாற்றை ஆராயின் உண்மை அறியவரும். எனவே, புதன் தமிழ்ச் சொல்லேயாம்.

——கா. அரசன்

அறிஞரை மயக்கிய ஐகாரம் ஔகாரம்.

பேராசிரியர். ச. பாலசுந்தரம்

பாரதத்தில் வெள்ளையர் ஆட்சி நிலை கொண்ட பின்னர் அவர் நடைமுறைகளை அவாவி போலியாக வாழ்வதிற் கட்டற்ற மோகங்கொண்ட உயர்மட்டத் தமிழர் பலர் தமது பண்பாடு சமய இன ஒழுகலாறுகளை குறைவாக எண்ணியதோடு, ஓரினத்தின் பண்பாட்டு நாகரிகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் கருவியும், துணைக்கருவியுமான தமது தாய்மொழியையும் தாழ்வாக மதித்துப் புழுங்கினர். தமிழர் பலர் தமிழிற் பேசவும் எழுதவும் நாணி எல்லாவகையிலும் அம்மேனாட்டவரையே பின்பற்றினர் என்பது வரலாறுகப் பேசப்படும் உண்மை.

அம்மனப்பாங்கு தமிழரிடத்தில் இன்னும் மாறவில்லை எனப் பிறர் கருதுகின்றனர். ஆனால் தமிழர்களோ தம் தாய்மொழிப் பற்றினைப் பறைசாற்றுவதில் தலைசிறந்து நிற்கின்றனர்.

வெள்ளையர் தம் ஆட்சிக்காலத்தில் அவர்களுள் பலர் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கியபோது வஞ்சமின்றித் தமிழை ஆங்கில மொழிக்கொப்ப சீர்திருத்தம் செய்ய வேண்டுமென விழைந்தனர். வெள்ளையர் வேடந்தாங்கிய சிலர் அவர்கட்குத் துணைபுரிய முற்பட்டனர். அக்காலந்தொடங்கி எழுத்துச் சீர்திருத்தச் சிந்தனை நிலவிவருகின்றது.

இடைக் காலத்தில் வடஆரியமொழி மோகத்திற்காட்பட்ட தமிழர் அம்மொழிக் கொப்ப எழுத்துக்களைப் பெருக்க விழைந்து சில எழுத்துக்களைக் கூட்டினர் இவர்கள் ஆங்கில மொழி மோகத்தில் சில எழுத்துக்களைக் குறைக்க அவாவுகின்றனர். மனப் பாங்கும் அதுவே தான்.

சீர்திருத்தம் சிலபோது செயல்படத் தொடங்குவதும் எதிர்ப்பு நேரும் போது அடங்குவதும் முறையாக நிகழ்ந்து வந்து உள்ளன. எனினும் அரசாணை மூலம் வெள்ளையரோ வெள்ளையர் ஆனவரோ வற்புறுத்தியதாகத் தெரியவில்லை

வெள்ளயரானவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பேசத்தொடங்கியகாலை ண-ன-ந என்பனவற்றுள் ஒன்றே போதும் ஐ, ஔ இரண்டும் வேண்டுவதில்லை- ஆய்தம் என்னும் எழுத்துத் தேவைப்படவில்லை 'ங்' வருமிடத்தில் 'ன்' என முதிக்கொள்ளலாம் என்றும் பிறவாறும் கூறிவந்தனர், இவ்வாறு குறைத்தால்

விஞ்ஞான அறிவு தமிழர்க்குப் பெருகிவிடும் தட்டச்சுக் களைச் செய்யவும், அச்செழுத்துக்களை எளிமைப் படுத்தவும் இச்சீர் திருத்தம் உடனடியாக வேண்டுமென்று கூறினர்.

மேலும் சிலர் இந்திய மொழிகட்கெல்லாம் ஒரே வகையான வரிவடிவு அமைந்தால் பலமொழிகளைக் கற்க வாய்ப்பாக இருக்கும் ஒற்றுமையும் நிலவும் என்றாற்போன்ற பல நன்மைகளை எடுத்துக் கூறினர்.

இக்கொள்கைகள் பாமர மக்களின் ஆதரவின்மையால் ஓய்ந்தனவெ தவிர ஒழியவில்லை. அவ்வப்போது சீர்திருத்த ஊர்வசி மேடையேரிச் சதுர்புரிவதிலும் சிலர் செலவின்றிக் கண்டு களிப்பதும் வரலாருக உள்ளது,

அம்மரபில் வந்து தமிழ் வளர்ச்சியில் பேரார்வம் கொண்டுள்ள அறிஞர் சிலர். ஏனைய தமிழர்களின் அறியாமைக்காக மனமிரங்கி உளம்வ நந்தி எல்லாச் சீர் திருத்தங்களையும் ஏற்காவிடினும் ஐ ஔ இரண்டையுமாவது நீக்கி விடுதல் நலம் என்றனர், அதனையும் பல பாமரத் தமிழர்கள் ஏற்காமை கண்டு அவ் எழுத்துக்களை நீக்காவிடினும் வரிவடிவை மாற்றி 'அய்' 'அவ்' என்று எழுதிக் கொண்டால் சிறிது முன்னேறலாம் என்கின்றனர், மொழியியல் மேதைகள் பலர் இச்சீர் திருத்தத்தை ஏற்கலாம என்றுகூறி ஏற்றுள்ளனர்,

இந்நிலையில் ஐகார ஔகார ஒலிஎழுத்துக்களை நீக்கிடலாம் என்பதைக் காட்டிலும் அவ் ஒலிகளை வைத்துக் கொண்டு வரி வடிவங்களை நீக்கி விட்டு அவற்றிற்கு மாற்ருக அய், அவ் என எழுதிக் கொள்ளலாம் என்பது மிகவும் அஞ்சத்தக்க நிலையாகும். ஆதலின் அதுபற்றி சில கூறுவதே இக்கட்டுறையின் நோக்கம்.

வரிவடிவங்கள் ஒலி வடிவங்களைக் கண்ணுய்க்கண்டு பயிலவும் பயிற்றவும் அமைத்துக் கொண்ட அடையாளங்களாகும், ஒரே வகையான ஒலிகளின் அமைந்த சிறுவேறுபாடுகளே வெவ்வேறெழுத்தாகக் கொள்ளப்படுகின்றன, அவ்வேறுபாடுகளை வரிவடிவே காப்பாற்ற வல்லது, பேச்சு வழக்கில் வட்டாரந்தோறும் சில எழுத்தொலிகள் வேறுபாடின்றியே வழங்குதலைக் காணலாம்.

எடுத்துக் காட்டாகப் பழம் என்னும் சொல் ஒவ்வோரிடத்தில் பளம்—பயம்—பஷம் எனவும் அண்ணன் என்னும் சொல் அன்னன் எனவும் அறிவு என்னும் அரிவு எனவும் இரவு என்னும் சொல் ராவு-ரவ்வு ரவை எனவும்இன்னும் பற்பலவாறு வழங்கிவருகின்றன

எனினும் எழுதுங்கால் யாவரும் ஒன்ருகவே எழுதி வருவதைக் காண்கிரேம். சில அறிஞர்கள் கூறுவதைப் போல பேசுவதைப் போலவே எழுதவேண்டும் என்ற நிலே வந்துவிட்டால் மிகக் குறுகிய காலத்திற்குள் ஒரு மொழி பல குழூஉ மொழியாக மாறிச் சிதைந்து விடும்' இவ்வகைய மாற்றம் நேரினும் மொழியைச் சிதையாமற் காத்து வருவது இலக்கணக் கட்டுக்கோப்பே ஆகும். இது நிற்க,

ஐ ஒள என்பனவற்றை 'அய்', 'அவ்' என்பன பேச்சு ஒலியில் ஒத்திருப்பினும் இலக்கண நோக்கில் முன்னவை ஓரெழுத்து ஒரு மொழி பின்னவை ஈரெழுத்தொருமொழி. முன்னதை புணர் மொழியிடத்து உயிரீறு பின்னவை புள்ளியீறு அதனுன் புணர் மொழிக் கண் பொருள் மாறுபடும் எடுத்துக்காட்டாகப்

புதுமை + ஆனவாழ்வு = புதுமையானவாழ்வு என உடம்படு மெய் பெற்று வரும்.

புதுமய் + ஆனவாழ்வு = புதுமையான வாழ்வு என மெய்யின் உயிரேறி வரும்,

இனி ஐகாரம் ஓரெழுத் தொரு மொழியாம் தலைமை, இறைமை, வியப்பு, ஐயம்' முதலிய பொருள் தரும். மேலும், இரண்டாம் வேற்றுமை உருபாகவும், முன்னிலே ஒருமை விணே விகுதியாகவும், தொழிற் பெயர் விகுதியாகவும் இன்னும் பலவாருகவும் வருகின்றது. இதனே 'அய்' எனமாற்றி எழுதும் போது மேற்கூறிய பொருளுணர்வு சிதையும்.

எடுத்துக்காட்டாக அவன்'தாதை' ஆடினன் என்பதற்கும் அவன் தாதய் ஆடினன் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு: முன்னது தந்தை என்னும் முறைப் பெயர்-பின்னது சந்தத்தைக் குறிக்கும் ஓசையமைப்பு,

இவ்வாறு ஒள என்னும் ஓரெழுத்தொரு மொழி சுருங்கு, வியப்பு. குறிப்பு முதலிய பொருள் வரும்: இதனே அவ் எனமாற்றின் புணர்மொழிக்கண் பொருளுணர்ச்சிச் சிதையும். அன்றியும் அவ் எனின் வகர ஈற்றுச்சுட்டுப் பெயர்க்கும் இதற்கும் வேறுபாடு தோன்ருமல் பிழைபுரிய நேரும்,

எடுத்துக்காட்டாக 'ஒள' இடைவராது என்பதற்கும் 'அவ்' இடைவராது என்பதற்கும் பொருள் வேறுபாடுண்டு. முன்னது ஒளகார எழுத்து மொழியிடையே வராது என்பதும், பின்னது அந்த இடத்தில் வராது என்பதும் பொருளாகும்,

இக்காலத்து மொழியியலாரும் பொருளே வேறுபடுத்துவன வெல்லாம் ஒலியன் என்றும் ஒவ்வொரு ஒலியனுக்கும் தனியடையாளம் உண்டு (வேண்டும்) என்றும் கூறுகின்றனர்

இனி, ஐகார ஔகாரங்களுக்குத் தனி அடையாளமில்லை யாயின்,

எழுத்தென படுவ அகர முதல் னகர இறுவாய் முப்ப தென்ப என்னும் நூற்பாவும்

ஔகார இறுவாய் பன்னீரெழுத்தும் உயிரென மொழிப என்னும் நுற்பாவும் பிழைபடும்,

அற்றன்று வரிவடிவைத் தான் மாற்றவேண்டு மென்று கூறுவதன்றி ஒலிவடிவ எழுத்தை அப்படியே கொள்வதனால் அச் சூத்திரப் பொருள் பிழையாகதெனின்.

''பன்னிருயிரும் மொழி முதலாகும்'' என்னும் சூத்திரத் திற்குக் காட்சிப் பொருளாக உரை எழுதிக் காட்டுங்கால் அ ஆ இ ஈ உ ஊ ஏ ஏ அய் ஒ ஓ அவ் என்றெ எழுதிக் காட்ட வேண்டும், அவ்வழி அகரமே மூன்று முறை வருதலன்றி ஐகாரம் ஔகாரம் எங்கனம் வரும்?

'உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும் கவவோடியையின் ஔவுமாகும்'' வகர ஈற்றைக் காட்டுவதன்றி ஔகார ஈற்றை எங்ஙனம் காட்டுவது? இனி

''க த ந ப ம எனும் ஆவைந்தெழுத்தும்
எல்லா உயிரொடு செல்லுமார் முதலே

என்பன முதலாகிய நூற்பாக்கள் யாவும் பொருளின்றி மாறும். ஐகார ஈற்றுச் சுட்டுப் பெயர் விறைப்பெயர் அவை—இவை—உவை (எவை) என்பவை இல்லையாய் யாவும் யகர ஈற்றுச்சுட்டுப் பெய ராய்த் தோற்றமளிக்கும், அவ்வழி ஐகார ஈறு பற்றி விதித்த புணர்ச்சி விதி நூற்பாக்கள் யாவும் ஒழியும். வேறுவிதிகளும் செய்ய நேரும்

மைஇ எழுதிய கண்ணினுள்
ஔஉ இவனெருவன் செய்தது காண் எனவரும்

செய்யுளிசை அளபெடைகளையும்

உரனசைஇ உள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன் எனவரும்.

சொல்லிசை அளபெடைகளையும் எழுதிக் காட்டுவதிற் குழப்பங்கள் நேரும்.

மற்றும் எதிர்காலத்தில் பயில்வோர் பழைய முறையில் உள்ளவற்றையும் பயில வேண்டும்,

இதுபற்றியான் காளயுத்தி சித்திரைத் திங்கள் (சூன் 1978) தமிழ்ப்பொழிலில் எழுதிய தொல்காப்பியமும் உயிரெழுத்துக்களும் என்னும் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

இனி எழுத்துச் சீர்மை வேண்டுமென்பாரிற் சிலர் ஐகார ஔகாரங்கள் அய். அவ் என்பவற்றின் கூட்டெழுத்துக்கள் என்றும் அஇ—அஉ என்பவற்றின் கூட்டெழுத்துக்கள் என்றும் கூறி இவ்வுண்மையைப் பண்டை இலக்கண நூலாகிய தொல்காப்பியம்

அகர இகரம் ஐகாரமாகும்

அகர உகரம் ஔகாரமாகும்

அகரத்திம்பர் யகரப் புள்ளியும்

ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

என விளக்கியுள்ள தென்றும் கூறி அகரத்திம்பர் வகரப் புள்ளியும் ஔவென் நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும் என ஒரு சூத்திரம் இருந்து விடுபட்டிருக்க வேண்டுமென்றும் விளம்பி வருகின்றனர். இக்கூற்று உண்மையா என்பதை சிறிது ஆய்வோம்.

ஐகார ஔகாரங்களை நீக்குவது பற்றி அன்றி மாற்றுவது பற்றியோ தமிழ் எழுத்துக்களை மட்டுமன்றித் தமிழ் மொழியையே மாற்றுவது பற்றியோ நான் கவலை கொள்ளவில்லை தமிழ் மொழி ஆறு கோடி தமிழர்கட்கும் பொது கருத்துரைப்பது மக்கள் உரிமை என் கவலையெல்லாம் தொல்காப்பியர் என்னும் ஒரு நல்ல மனிதர் இப்பழிக்குச் சான்றுளர் ஆக்கப்படுவதை எண்ணியே யாம் பாவம்! அவர் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமாகக் கருதி ஆராய்ந்து அமைத்த இவைபோன்ற நூற்பாக்களுக்கு இடைக்காலத்து வந்த உரையாசிரியன்மரர் அவர்தம் காலச் சூழ்நிலையில் விளங்கிய முறையில் எழுதிச் சென்ற உரைக் கருத்துக்களை இன்றைய அறிவியல் காலத்திலும் அப்படியே நம்பி உள்ளபடியே தமிழ்ப்பற்றும் நடுவு நிலையும் உடைய நல்லறிஞர் பலர் தொல்காப்பியர் எண்ணுததையும் கூறுததையும் அவர் கருத்தாக எண்ணிப் பரிவோடு பரப்பி வருகின்ற நிலையை எண்ணும் போது பெரிதும் வருத்தமே நிகழ்கிறது.

பொருளுரை:

தமிழ் எழுத்திலக்கணத்தைப் புலப்படுத்திய சான்றோருள் தொல்காப்பியரை, மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டிப் பல் புகழ் நிறுத்த படிமையோன் எனப் பனம்பாரனுர் பாராட்டுகின்றார். ஒல்காப் புலமைத் தொல்காப்பியன் என பின்வந்த இலக்கண நூலார் போற்றுகின்றனர். காரணம் அவர் எழுத்திலக்கணத்தை

இயல்களாக வகுத்துச் சூத்திரங்களைப் பகுத்துக் கூறும் ஒப்பற்ற முறையேயாம்

இனி இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட சூத்திரங்களையும் அவை கூறப்பெற்றுள்ள இயலையும் அங்கு கூறப்பெற்ற நோக்கத்தையும் அவற்றின் செம்பொருளையும் காண்போம்.

நூற்பாக்கள்:- அகர இகரம் ஐகாரமாகும்
அகர உகரம் ஔகாரமாகும்
அகரத்திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும்

இவை கூறப்பெற்றுள்ள இயல் 'மொழிமரபு' இது தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் இரண்டாவது இயலாகும். முதலாவது இயல் நூன் மரபு

எழுத்திலக்கணத்தைக் கூறப்புகுந்த ஆசிரியர் இவ்வாறு இரண்டு இயலாகப் பகுத்துக் கொண்டது ஏன்? இவ்வினை விற்கு விடையாக நூன்மரபில் தனி நிற்கும் எழுத்துக்களுக்கும், மொழிமரபில் மொழியிடை நிற்கும் எழுத்துக்களுக்கும் இலக்கணங் கூறுவதாக இளம்பூரணரும் தொல்காப்பியம் என்னும் நூலுக்குமரபாகும். எழுத்துக்களைப் பற்றிக் கூறுதலின் நூன்மரபு என்றும் மொழியிடை நிற்கும் எழுத்துக்களைப் பற்றிக் கூறுதலின் மொழிமரபு எனவும் பெயரிடப்பட்டுள்ளதாக நச்சினார்க்கினியரும் விளக்கந்தருகின்றனர்.

சிவஞான முனிவர் இலக்கண நூலுக்கு மரபாகும் பெயர்களைப்பற்றிக் கூறுவதால் நூன்மரபு எனப் பெயரிடப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார், நூன்மரபு என்பதற்கு எழுத்து மரபு எனக்கொள்ளல் வேண்டும் என வேங்கடராசலு ரெட்டியார் விளம்புகிறார். பின் வந்த விளக்க உரையாளர் பலரும் இவர்தம் கருத்துக்களை ஒட்டியே விளக்கங் கூறிவருகின்றனர்'

நூன்மரபிற் கூறப்பெற்ற எல்லாஎழுத்துக்களும் மொழிக்கு உறுப்பாகத் தாமே வருகின்றன? மொழிமரபிற் கூறப்பெறும் எழுத்துக்கள் யாவும் நூன்மரபிலும் கூறப்பெற்றுள்ளனவே? நச்சினார்க்கினியரை மறுத்துக் கூறும் சிவஞான முனிவர் கூற்றுப்படி நோக்கின் சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரத்திலும் இலக்கண நூலுக்கே மரபாக உரிய பெயர்களை அவ்வவ் வதிகாரங்களின் முதற்கண் ஓரியலில் வைத்து ஆசிரியர் கூறியிருத்தல் வெண்டுமே, இவைபற்றிஆய்வுரைகளை எனது தொல்காப்பிய அகலஉரையிற் கூறுவேன்ஆதலின் நூலாசிரியர் கருத்தை மட்டும் ஈண்டுக் கருதுதல் முறையாகலின் அது பற்றிக் காண்போம்.

நூன்மரபு

நூல் ⟶ என்பது நுவல் என்பதன் சுருக்கமாகும், இது நிகர் ⟶ நேர் — அகல் ⟶ ஆல் — துகள் ⟶ தூள் என்றாற் போல நிறையசை நேரசையாக மாறியதொரு வினைப்பண்புப்பெயர் நுவல்—நு + ஒல் = (ந் + ஒல்) என்பதற்கு நாவால் ஆகும் ஒலி என்பது கருத்து. இது முதற்கண் எழுத்தொலியைச் சுட்டப் பின் ஆகுபெயர் நெறியால் புத்தகத்தை (நூலை)க் குறித்து வழங்குகின்றது. [எழுத்து என்பது நூலைக் குறிப்பதை எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்னும் குறட்பா அடியால் உணரலாம்,] ஈண்டு நூல் என்பதை ஆசிரியர் அதன் அடிப்படைப் பொருளாகிய எழுத்தொலி என்னும் பொருளில் அமைத்துள்ளார். 'மரபு' என்பது வழிவழியாக வந்து முற்றி நிற்பது என்னும் பொருளுடையது. காரணம் தெளிவாக அறிய வியலாதது என்பது இதன் கருத்து. மார்க்கம் என்பது இதனடியாகப் பிறந்த தமிழ்ச் சொல். [வடமொழியில் உள்ள மார்க்கம் என்பது வேறு] நூலினது மரபு என்னும் ஆறுவதன் தொகை அவ்வியலைச் சுட்டி நிற்றலின் அன்மொழித் தொகை.

எனவே மரபாக வரும் எழுத்தொலிகளின் இலக்கணங்களைப் புலப்படுத்தும் இயல் என்பது இதன் பொருள்.

அதனான் இவ்வியலுள் தமிழ் எழுத்தொலிகள் இவை என்பதும், உயிர்ப்புற்று இசைப்பன இவை என்பதும் அவ்வொலிகளின் அளவையும் உருப்பெற்று நிற்பன இவை என்பதும் அவை இன்னவாறு ஒலிக்கும் என்பதும் அவற்றின் பிறப்பமைதியால் அவை எய்தும் பண்புகளும் மயக்கங்களும் இவை என்பதும் அவை நீளும் முறை இவ்வாறு என்பதும் பற்றியே ஆசிரியர் கூறுகின்றார்.

அவ் வொலிகளை வழங்குதற் பொருட்டு ஆசிரியர் ஆளும் குறியீடுகளே பெயராம் அமைதலின் அவற்றின் பெயரும் முறையும் உடம்பொடு புணர்தலான் பெறப்பட்டன.

மொழி மரபு

மொழி மரபு — மேற்கூறிய ஒலியெழுத்துக்கள் (பொருளைச் சுட்டுதற் பொருட்டு) மொழியின்கண் ஆகும் மரபு பற்றிய இலக்கணங் கூறும் பகுதி என்பது பொருள்,

[மொழியும் மொழியின்கண் எழுத்தும் என்பது முதலும் முதலின் கண் சினையும் என்பது போன்ற தொரு மரபு]

மொழி ⟶ என்பது முழுமை முழக்கம் என்னும் சொற்க ளுக்கு மூலமாகிய 'முழ்' என்னும் உரிச்சொல்லின் திரிபாய் இகர விகுதி பெற்று நிற்பதொரு வினைப்பெயர்.

பொருளைச் சுட்டி உணர்த்துதலின் முழுமையும் ஒலியா லாதலின் முழக்கமும் சொல்லும் பொருளும் (அபேதமாய்) ஒன்ருகி நிற்றலின் மூழ்குதலும் ஒருசேர இச்சொல்லகத்து அமைத்துள்ளமை காணலாம்.

[உரிய டிகள் ஒன்றுக்கு மேற்பட்டபொருளைத் தம்மகத்துக் கொண்டுள்ளமையே பல பொருள் ஒரு சொல் தோன்றுதற்குக் காரணமாகும்]

அதனுன் இவ்வியலுல் நூன்மரபிற் கூறப்பெற்ற எழுத்துக் கள் மொழிக்கண் நிற்குமாறும் அவை மொழியாமாறும், மொழிக்கு உறுப்பா மாறும் ஒருசில ஒன்றற் குஒன்று மாற்றெழுந்தாக இயங்கு மாறும் கூறியமைத்தனர்.

ஆக எழுத்திலக்கணத்தை ஈரியலாகப் படுத்துக்கொண் டுணர்த்தியதன்காரணம் மேல் கண்ட விளக்கங்களால் ஒருவாறு புலப்படும்

எனவே நூன்மாபில் மொழியமைப்பைப் பற்றிய ஆராய்ச்சி யோ மொழிமரபால் எழுத்தொலியைப் பற்றிய ஆராய்சியோ செய்ய முற்படுவது பிழையாம்,

காலச் சூழ்நிலைகளாலும் வடமொழி தாக்கத்தாலும் தொல் காப்பிய இயலமைப்பையும், சூத்திரப் பாங்கையும் கணித்து நோக் காமல் உரையாசிரியர்மார் கூறிவந்த உரைகளை எழுதுவோர் ஒரு வகையாக எழுதிவைத்துள்ளனர். இளம்பூரணத்துள் நச்சர் உரை யும் பேராசிரியத்துள் பலர் உரைகளும் கலந்துகிடக்கின்றன. இது நிற்க,

உரையாசிரியன்மார் நூன்மரபிற் கூறப்பெற்ற மெய்ம் மயக்க நூற்பாக்களை மொழியமைப்பைப் பற்றிய தாக எண்ணி உரைகண் டுள்ளனர். அவ்வாறு மொழிக்கண் அமையும் மாற் றெழுத்துக்களை தனி எழுத்தாகக் கருதி உரைகண்டுள்ளனர். இவ் வுரைக் கருத்துக்களையே தொல்காப்பியர் கருத்தாக எண்ணித் தமிழ் அறிஞர்கள் பயின்றும் பயிற்றியும் வருகின்றனர். உரையாசிரியர் உரையையும் வடமொழி இலக்கணத்தையும் குழைத்து வழிநூல்கள் எழுந்துள்ளன.

வடமொழித் தாக்கமும் வைதீக சமய ஆக்கமும் மேலிட எழுதிய உரையாசிரியன்மார் அகர இகரம் ஐகாரம் ஆகும். அது கொள்ளற்க என்று எழுதினர். அகரத் திப்பர் யகரப் புள்ளியைக் கொள்க என்றியம்பினர்.

சிவஞான முனிவர் இவை சந்தியக்கரம் பற்றிக்கூறுவதாக வலிந்துரை கூறிச் சென்றார் வடமொழியாளர் கூறும் சந்தியக்கர விளக்கம் பிறழவுணர்வால் தோன்றியதே யாகும், இதுபற்றிச் சிறிது ஆய்ந்துணர்தல் நலம்மாதலின் சந்தியக்கரம் பற்றி அவர் கூறுவதைக் காண்போம்

வடமொழியுள் அகாமுதலாகக் கூறப்பெறும் (உயிர்) அச்சு அல்லது சுரம் பதின்ஞறு இவற்றுள் ஏ ஐ ஓ ஔ என்னும் நான்கை யும் சந்தியக்கரம் என்பர். சந்தியக்கரமாவது கூட்டெழுத்து என் பது அவர்தம் கருத்து கூட்டெழுத்தென்பது நூலாசிரியர் கருத் தாகத் தோன்றவில்லை ஏனெனின் கூட்டெழுத்தை அவர்கள் சம் யுக்தா அட்சரம் என்கின்றனர்.

உரைகண்டவர்கள் ஏ ஓ ஐ ஔ நான்கையும் கூட்டெழுத் தென்பர். ஆழ்ந்து நோக்கும் இவை நான்கும் பதசந்தியின்கள், நிலைமொழி வருமொழிகளை இணைக்கும் எழுத்துக்கள் இவை என்பதே நூலாசிரியர் கருத்தென்பது விளக்கமாகிறது.

அஃதாவது பதப்புணர்ச்சிக்கண் நிலைமொழி ஈறும்வருமொழி முதலும் உயிரெழுத்தாக நிற்குமிடத்துப் பின்வருமாறு புணரும்.

அகர ஆகாரத்தின் முன் அகர ஆகாரம் வரின் ஈறும் முதலும் கெட இரண்டற்கும் பொதுவாக 'ஆ' என்னும் நெட்டெழுத்துத் தோன்றும் இதனைத் தீர்க்கசந்தி என்பர் அவர்

எ-டு : பத + அம்புயம் = பதாம்புயம் எனவும்
சிவ + ஆலயம் = சிவாலயம் எனவும்
சேநா + அதிபதி = சேநாதிபதி எனவும்
சதா + ஆநந்தம் = சதாநந்தம் எனவும்

இகர ஈகாரத்தின் முன் இகர ஈகாரம் வறின் ஈறும் நுதலும்கெட இரண்டற்கும் பொதுவாக ஈ என்னும் நெட்டெழுத்துத் தோன்றும் இதுவும் தீர்க்க சந்தியெயாம்.

எ-டு: கிரி × இந்திரன் = கிரீந்திரன் எனவும்
கிரி + ஈசன் = கிரீசன் எனவும்
மகீ + இந்திரன் = மகீந்திரன் ஏனவும்
நதீ + ஈசன் = நதீசன் எனவும் வரும்

இவ்வாறே உகரமும் ஊகாரமும் வரும்

எ-டு:- குரு+உபதேசம் = குருபதேசம் எனவும்
மேரு+ஊர்த்துவம் = மேருர்த்துவம் எனவும்
வதூ+உத்துவரகம் = வதூத்துவரகம் எனவும்
வதூ+ஊரு = வதூரு எனவும் வரும்

இனி, அகர ஆகாரத்தின் முன் இகர ஈகாரம் வரின் தீர்க்கசந்தியிற் போல இவை ஒத்த எழுத்துக்கள் அன்மையின் இவற்றை இணைக்க இரண்டற்கும் பொதுவாக ஏ என்றும் நெட்டெழுத்துத் தோன்றும். இவ்வாறே அ ஆவின் முன் உ ஊவரின் இரண்டற்கும் பொதுவாக ஓ வரும் இவற்றைக் குணசந்தி என்பர்.

எ:டு. நர+இந்திரன் = நரேந்திரன்
சுர+ஈசன் = சுரேசன்
தரா+இந்திரன் = தரேந்திரன்
மகா +ஈசன் = மகேசன் எனவரும்

பரத+உதகம் = பரதோதகம்
ஞான + ஊர்ச்சிதன்ஞானோர்ச்சிதன்
கங்கா +உற்பத்தி = கங்கோற்பத்தி
தயா+ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன் எனவும் வரும்

இனி அகர ஆகாரங்களின் முன் ஏகர ஐகாரங்கள் வரின் ஈறும் முதலும் கெட இரண்டற்கும் பொதுவாக ஐ என்னும் நெடில் வரும், இதனை விருத்தி சந்தி என்றும் கூறுவர்,

எ-டு. லோக + ஏகநாயகன் = லோகைகனாயகன் எனவும்
சிவ + ஐக்கியம் = சிவைக்கியம் ,,
தரா + ஏகவீரன் = தரைக வீரன் ,,
மகா + ஐசுவரியம் = மகைசுவரியம் எனவும் வரும்,

இவ்வாறே அ ஆவின் முன் ஓ ஔவரின் ஈறும் முதலும்கெட இரண்டற்கும் பொதுவாக ஔ என்னும் நெடில் வரும். இதுவும் விருத்திச் சந்தி.

எ.டு:- கலச + ஓதனம் = கலசௌதனம் எனவும்
திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம் ,,
கங்கா + ஓகம் = கங்கௌகம் ,,
மகா + ஔதாரியம் — மகௌதாரியம் எனவும் வரும்,

எனவே நிலைமொழிகளில் ஒத்த எழுத்துக்கள் நிற்பின் அவற்றுள் ஒன்ருகிய நெடிலும் மாறுபட்ட எழுத்துக்கள் நிற்பின் இரண்டு ஓசைகட்கும் பொதுவாகிய எழுத்தும் இடையே தோன்றி சந்திக்க வைப்பதை அறியலாம் அம்முறையில் நூலாசிரியர் ஏ ஓ ஐ ஔ என்பவை சந்தியக்கரம் என்று இவற்றை வழங்கியுள்ளமை புலனுகும்.

உரையாசிரியர்மாரும் சந்திக்க வைப்பது என்னும் பொருளில் கூட்டும் எழுத்து என வழங்கி யிருத்தல்கூடும், பின்வந்தோர் அவைகளே ஈரொலிகள்கூடிய கூட்டெழுத்துக்கள் எனக்கொண்டு விட்டனர். வடமொழியே தமக்குக் குறிக்கோள் மொழியெனக் கொண்டுவிட்ட தமிழாசிரியன்மாரும் அப்படியே கருதி இத்தொல் காப்பியச் சூத்திரங்களை சந்தி வர்க்கங்களினியல்பு கூறுவதாகக் கருதிவிட்டனர்.

எனினும் பிரயோக விவேகநூலாசிரியர் மட்டும் இந்நூற் பாக்களை கூட்டெழுத்திலக்கணங் கூறுவதாகக் கருதுவது பொருந் தாது, இணை எழுத்தெனக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்ருர் ஒருநோக்கில் இவர் யாவரும் இவற்றைப் போலி எழுத்திலக்கணம் கூறுவதாகவும் கொண்டுள்ளனர்.

போலி என்பது இக்காலத்தில் உண்மைபோல காணப்படும் பொய்மை என்னும் கருத்தில் வழங்கப் படுகின்றது, தொல்காப் பியர் இச்சொல்லை ஒப்புணர்த்தி வரும் உவமச்சொல் என்று குறிப் பிடுகின்ருர் 'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்'' என்பதனல் இதனை உணரலாம்,

இனி ஒருபொருளை மற்ருென்றனேடு ஒப்பிட்டுக் கூறுங்கால் வினை, பயன் மெய், உரு, என்னும் வகையால் சிறப்பு' நலன், காதல்' வலி, கிழக்கிடு பொருள் நிலைக்களனடியாகக் கூறுதல் வேண்டும் என்பார் ஆசிரியர். 'உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்'' என்பது அவரது வன்புரை ஆகும்:

அந்நெறியால் வழக்கினும், செய்யுளினும் தனிமொழியினும் புணர்மொழியினும் வரும் சொற்களில் உள்ள எழுத்துக்கள் ஒன்றற் கொன்று மாற்ருக வருதலும் வரினும் பொருள்வேறுபடா திருத்தலு உண்டு,

அவ்வாறு ஒன்றற் கொன்று ஒப்பாக அல்லது போலியாக வருவனவற்றை ஆராய்ந்து அவற்றை மொழிமரபின் கண் அமைத்துள்ளார் ஆசிரியர்.

அவையாவன:- ஐகாரத்திற்குப் போலியாக 'அஇ' என்பனவும் (அயி), அய் என்பனவும் ஒளகாரத்திற்குப் போலியாக 'அஉ, (அஉ) என்பனவும் இகரத்திற்குப் போலியாக யகரப் புள்ளியும் மகரதிற்குப் போலியாக னகரமும் ஆம்,

புணர் மொழியில் னகர ணகர ஒற்றுக்களின் முன் யகரமும் ஞகரமும் மாறிவரும் என்று கூறுவர்.

''அகர இகரம் ஐகாரமாகும்'' என்றதன் பயன் வழக்கினும் செய்யுளினும் ஐகார நெட்டெழுத்துக்கு மாற்றாக (போலியாக) அஇ இணைக்குறிலாய் இணைந்து வந்து அவ் ஐகாரத்தின் பொருள் மாறாமல் நிற்றலால் இப்போலி செய்யுட்குப் பயன்படுகின்றது அஃதாவது வைரம்—கைலை—ஐவனம்—தைலம்— பைதல் என்பவை வயிரம் — கயிலை - ஐயிவனம்—தயிலம்— பயிதல் என நிற்றங்கால் செய்யுளின்கண் அசை மாறுபட்டுச் சீர்நிறைத்தலும் —எதுகைத் தொடை செய்தலும் பயனாகின்றன. எவ்வாறெனின் வைரம் என்னும் நேர் நேர் அசைகள் வயிரம் என மாறின் நிரை நேராம். எடுத்துக்காட்டாகப் பயிலுவர் முனிவர்தம் பாசம் வீடுறக்

கயிலை யங்கிரி வளர் கடவுள் நாமமே

எனவரும் செய்யுட்கண் பயிலுவர் என்பதற்கு எதுகையாக வந்த கைலை என்னுஞ்சொல் கயிலய் எனப் போலியாக வந்து அசையும் எதுகையும் ஒன்றுபடுகின்றன. இவ் ''அஇ'' என்பவை உடம்படுமெய்ப்பெற்று அயி என வரும். எனக் கருதாமல் அஇவனம் என்றே வரும்மெனக் கருதி கொள்ளற்க என்றார் நச்சினார்க்கினியர். [—இப்போலி மொழிமுதற்கண் மட்டுமே வரும். இடையிலும் ஈற்றிலும் 'அய்' என்னும் போலி எழுத்தேவரும். அதுவருமாறு:— நிலையம்—நிலயம்—குவளை—குவளய்—அன்னை— அன்னய் எனவும் இரண்டனுருபேற்று அனயயை என்றும் அனயய் என்றும் வரும்.

இதன் பயனாவது சீரும் (தளையும்) ஓசையும் கெடாமற் செய்வதாகும். எடுத்துக்காட்டாக. ''அன்னையான் நோவதவமால் அணியிழாய் புன்னையையான் நோவன் புலந்து' என்னும் குறள் வெண்பாவினுள் ஐகாரம் நின்றாங்கு நிற்பின் நாலசையாய் அமைந்து சீர்கெட்டு ஓசை தவறும், அவ்வழி அய் என்னும் போலி எழுத்தான் அன்னையான் என்றமைத்து இசைப்பின் மூவசைச் சீராகிச் செப்பலோசை தவறாது நிற்கும், இப்போலியை வையம்-வய்யம் எனமுதற்கண் கொள்ளின் இரண்டும் தேமாவாகவே நிற்றலின் அதனாற் பெறும் பயன் ஓசையின்மையின் இஃது இடையிலும் ஈற்றிலுமே கொள்வப் படும். இவ்வேறுபாடுகருதியே ஆசிரியர்,

அகரஇகரம் ஐகாரமாகும் என்றும், மேலும்
அகரந்திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ் கினை மெய்பெறத் தோன்றும்

என்றும் இருவகையும் அமையக்கூறினர். கூறியவர் அகரஇகரம் போலியாக வரினும் மாத்திரை குறையாதென்பதும் அகரயகரப் போலியாக வரின் மாத்திரை குறையும் என்பதும் உணர்துவாராய்

ஓரளபாகும் இடனுமாறுண்டே
தேருங்காலை மொழிவயினுன'' என்றுர்

'தேருங்காலை' என்றதன் கருத்து ஓரளபாதல் மொழியிடையில் வரும் போலிக்கே என்பதாகும். ஈற்றில்வரின் குவளய்— அன்னய் என ஒன்றரை மாத்திரையோடு நிற்றல் அறியலாம்.

இவ்வாறே மொழிமுதற்கண் ஔகாரத்திற்கு மாற்றெழுத்தாக அகர உகரங்களை இணையாக அமைத்துக் கூறினார். அதுவருமாறு

கௌரியர்—கவுரியர் என்றும் மௌரியர்—மவுரியர் என்றும் வரும். (மௌலி 'மோலி எனத் திரிந்து வழங்குதல் போல மௌரியர் என்பது மோரியர் எனவும் வழங்கும்,) இதுவும் செய்யுளின்கண் சீரும் தொடையும் நோக்கி அமைக்கப்பட்டதாகும்: எடுத்துக்காட்டாகக்

கவினுறு செந்தமிழ்க் காதல் மேவலால்
கவுரியர் மருகனைக் கண்ணுதல் வந்தனன்.

என்னும் செய்யுளடிகளில் அசையும் தொடையும் நிறைந்தலைக் காணலாம்.

ஔகாரம் ஒருமொழியின் இடையிலும் ஈற்றிலும் வாராமை யின் அகரத்திம்பர் வகரப் புள்ளியும் ஔவென் நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும் எனக் கூறுது விட்டார். இதனுனும் 'அம்' என்னும் போலி எழுத்து இடையிலும் ஈற்றிலும் வருதற்கு விதித் தமை புலனும்.

இந்நுட்பமறியாத உரையாளரும் பிறரும் மிகையாலும் சூத் திரத்தைத் திருத்தியும் அகரத்திம்பர் வகரப்புள்ளி ஔகாரமாகும் எனக் கொள்க என்றனர்.

தொல்காப்பிய நெறியையும் தமிழ்மொழியமைப்பையும் ஓர்ந்துணராமல் போலி வேண்டாத இடங்களிலும் போலிகொள்ளக் கருதி

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய் வேல் பறியா நகும் என்ற குறட்பாவின் முதலடி முதற் சீரை கய்வேல் என்றும்

ஔவித் தழுக்காறுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டிவீடும்' என்ற குறட்பாவின் முதலடி முதற் சீரை அவ்வித்து எனவும் திரித்து வரைந்துள்ளனர், அவர்தாம் ஓசையைச் செவி கருவியாக உணராமல் எழுத்தை வரிவடிவிற்

கண்டே இம்முரண்பாடுகளைச் செய்துள்ளனர் இவ்வாறு முரணைத் திருத்திக் கொள்ளப்பட்டிருக்கும் இடங்கள் பலவுள. அவற்றை அறிஞர் செம்மை செய்வாராக!

இதுகாறுங் கூறியவற்றால்

''அகர இகரம் ஐகாரமாகும்''

''அகரஉகரம் ஔகாரமாகும்''

''அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயென்நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

''ஓரளபாகும் இடனுமாருண்டே
தேருங்காலை மொழிவயினான''

என்னும் சூத்திரங்கள் செய்யுள் வழக்கில் அசையும் சீரும் தொடையும் கருதி மொழிக்கண் ஐகார ஔகார நெட்டெழுத்துகளுக்கு ஒத்த போலி எழுத்துக்களாக அஇ அய் அஉ என்பவை கொள்ளபெற்றன என்பதும் இவற்றை எழுத்துக்கள் மொழியாகும் இலக்கணங் கூறும் மொழிமரபில் வைத்து ஆசிரியர் கூறியதன் பயன் இதுவென்பதும் இந்நூற்பாக்கள் ஒலி எழுந்துக்களைப்பற்றி யனவெனக்கருதி உரைகாணுதல் தொல்காப்பிய நெறிக்குப் பொருந்தாதென்பதும் வரிவடிவங்களுக்கும் இச்சூத்திரங்களுக்கும் எட்டுணையும் இயை பில்லை என்பதும் பிறவும் புலப்படும்

———(o)———

ஆய்வு இன்றி எதனையும் ....

இளைஞர் எப்பாடத்தையும் தம் அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிதல் வேண்டும். ஆசிரியர் 'சரி' என்றால் 'சரி' 'இல்லை' என்றால் 'இல்லை' என்னும் முடிவுக்கு வரும் இளைஞன், தன் அறிவைத் தானே கொலை செய்பவன் ஆவான். எதையும் நன்கு ஆராய்ந்தும், வல்லார் வாய்க்கேட்டும் கொள்ளல் வேண்டும். ஆய்வு இன்றி எதனையும் கோடல் தவறு.

—முனைவர் மா. இராசமாணிக்கனார்.

வைகாசித் திங்கள்

—0 வெண்பாப் பரிசுப் போட்டி முடிவு 0—

× ——— ×

முதற் பரிசு பெற்ற வெண்பா :-

1 ۞ இந்தியோ ஆங்கிலமோ எந்தப் பிறமொழியோ
வந்தால் அவையெல்லாம் மாப்பகையோ
— சிந்தித்தால்
சொந்தமொழி போற்றுத சோரத் தமிழரைப்
போல்
பைந்தமிழுக் கில்லை பகை.

கவிஞர். காங்கேயம். புகழேந்தி
அரசுமேனிலைப் பள்ளி'
காங்கேயம்

போட்டிக்காக வந்தனவற்றுள் வெளியிடத் தக்கவை என பதிப்பாசிரியர் குழு தேர்ந்தவை:

2 தெள்ளுத்தமிழ்க் கோட்டைக்குள் தீமொழிகள் வந்தக்கால்
வெள்ளத்தில் சிக்குண்ட வெண்மணலாம்— உள்ளுங்கால்
செந்தேனை மிஞ்சுகின்ற தீஞ்சுவையைக் கொண்டிலங்கும்
பைந்தமிழுக் கில்லை பகை

—கவிஞர். சேதரசு (எம்.ஏ) பி.எல், ஐ, எஸ். ஸி
இராசபாளையம்.

3 எத்தனை மேன்மொழிகள் எந்தமிழில் சேர்ந்தாலும்
அத்தனைக்கு மேலாய் அமர்ந்திருந்து — நித்தமும்
வந்தனைக ளேற்று வசந்தமாய் வாழ்ந்துவரும்
பைந்தமிழுக் கில்லை பகை.

— இலாரன்சு எட்வர்டு, பி. லிட்,
சதுவை.

4 சிர்திசைப் பண்பாடும் தெள்ளமுது தோய்கின்ற
சந்தனத் தென்பொதிகைத் தண்ணருவி ஆடலைப்போல்
செந்தழலில் மூழ்கும் சிறுத்தைகளைப் பெற்றெடுக்கும்
பைந்தமிழுக் கில்லை பகை.

—புலவர். சுரா, பி. லிட், அ. உ. பள்ளி,
அம்மையநாயக்கனூர் மதுரை.-1

5 முத்தமிழே மூச்சாய்மொழியுணர்வே தண்ணுணர்வாய்
இத்தரையில் நந்தமிழர் பெற்றிட்டால்—வித்தகமாய்
செந்தமிழின் சீர்மையும் வென்றிடுமே என்றென்றும்
பைந்தமிழுக் கில்லை பகை.

— மோ. அந்தோனி ராசு (பி.லிட்.)
கரந்தைப் புலவர் கல்லூரி.

5-A வந்த பிறமொழியை வாவென்று கையேந்தி
முந்தவிடந் தந்தார் முடங்கிவிட்டார்—செந்தமிழர்
இந்த நிலையறிந்து இன்றமிழை நாம்காத்தால்
பைந்தமிழுக் கில்லை பகை.

—இரா. இளவழகன், க. மு.
பச்சயப்பன் கல்லூரி; சென்னை—30.

6 குழவியு மூன்றடியுங் கூட விழுப்புண்
அழகொடு மண்புகு மாண்மை—பழகிவர
முந்துறு வதற்கெல்லா முந்துற்றுத் தான்றிகழும்
பைந்தமிழுக் கில்லை பகை.

சோ, மாரிக்கனி,
26. நரசய்யர் தெரு;
பழையவண்ணரப்பேட்டை,
சென்னை—21:

7 ஆகாச வாணி அடியெடுத்து வைக்கையிலே
ஏகோபித் தெல்லாம் எதிர்த்தொழித்தோம்—ஏகோபித்
தெந்தமிழர் எல்லாம் இதுபோல் இணைந்திட்டால்
பைந்தமிழுக் கில்லை பகை.

பூவரசு., சாந்தி நிலையம்,
தாராபுரம் சாலை காங்கேயம்
பெரியார் (மா.வ)

8 ஆரியமும் ஆக்கிலமும் ஆங்கவைபோல் பல்மொழிகள்
சீறிவந்து செத்ததுண்டு தென்புவியில்—பேரியற்கை
தந்தகொடை! மோதவந்து சார்ந்தவற்றை
—வென்றுநிற்கும்
பைந்தமிழுக் கில்லை பகை.

பாவலர். இடிமுரசு பி. லிட்,
அறிவுப்பண்ணை;
சென்னை-14-

9 எல்லோரும் பாரதத்தில் இந்தி படிக்கவெனச்
சொல்வார்கள் இங்கும்; சுரணையிலாப்—புல்லரவர்;
புத்தி கெட்ட இத்தகையர் புல்லுருவி போல்வரலால்
பைந்தமிழுக் கில்லை பகை

—ப. செகநாதன்,
நல்லிக்கவுண்டன் பாளையம்,
பெரியார் (மா. வட்டம்)

10 வெந்ததைத் தின்று விதிவந்தால் சாகின்ற
மந்த மதியினரோ மான்விழியே!—சொந்தமெனச்
செந்தமிழர் யாவரையும் கொள்வதனுல் யாண்டுமே
பைந்தமிழுக் கில்லை பகை.

—புலவர் அ.வைத்திலிங்கம்,
அரசினர் உயர் நிலைப் பள்ளி,
கருவூர், புதுக்கோட்டை (மா வ)

11 கலப்படம் செய்தல் கடைக்காரர் தன்மை,
புலவரும் செய்வதோ புன்மைச்—கலப்படம்?
செந்தமிழில் வேற்றுச் சொல் சேர்க்காதீர் வேறேதும்
பைந்தமிழுக் கில்லை பகை!

— சாப்டூர் சதுரகிரியான்,
நூலகர், செந்துரை,
மதுரை (மா-ம்)

——— (o) ———

பரிசு பெற்ற கவிஞர் காங்கேயம் புகழேந்தி அவர்கட்குத் துந்துபி ஆண்டுக்குரிய தமிழ்ப்பொழில் திங்கள்தோறும் இலவசமாக அனுப்பப் பெறும்

ஆனித் திங்களுக்குரிய வெண்பாப் போட்டி

ஈற்றடி:

உலகத்தார் செய்வர் சிறப்பு

பாடல்கள் வந்து சேரவேண்டிய
இறுதிநாள்:- **10-7-1982**

பதிப்பாசிரியர் குழு

இலக்கிய இலக்கண

வினு விடை

வினு 1:— ஞமலி என்ற சொல் மஞலி என ஆகிப்பின்னர் மயில் என ஆயிற்று என்று மொழிநூலாசிரியர் திரு. எல். வி இராமசாமி ஐயர் குறிப்பிட்டுள்ளார் இது பற்றித் தங்கள் கருத்தென்ன? ஞமலி— மயில் ஆகிய இச் சொற்களின் வேற்சொற்கள் யாவை?

வினு 2:— தமிழில் செவி என்றும் கன்னடத்தில் கிவி ன்றும் வழங்கப் படுகின்ற இச் சொற்களின் வேர்ச்சொல் யாவை?

இரா. சுந்தரமூர்த்தி
தஞ்சாவூர்

விடை 1:- ஞமலி—மயில் இச் சொற்கள் வெவ்வேறு பொருளன ஞமலி என்பது நாயையும்—மயில் என்பது மஞ்ஞை என்னும் பறவையையும் குறிக்கும். நாயைக் குறிக்கும் ஞமலி என்பதைத் திசைச் சொல் என்று உரையாசிரியன்மார் குறித்துள்ளனர், நாவால் மலிந்த நமலி (நா—நாஇ நாயி—நாய்—நா) இதன்வேர்சொல் தகரம்: நாயிறு — ஞாயிறு, நாள்அன்று — ஞான்று, நாயில்—ஞாயில், நமன்—ஞமன் என நகரம் ஞகரமாகத் திரியுமாதலின் நா, ஞா எனத் திரிந்து பின் ஞகரமாகி இருக்கலாம்.

மயில் என்பது மஞ்ஞை என்னும் சொல்லின் திரிபு. மஞ்ஞை என்பது மயிலின் ஓசை கருதி அமைந்த பெயர். அஃதாவது மயில்ஞை—ஞை என்று அகவி ஞில் என்று முடிப்பது போலிருக்கும். ஆதலின்' மஞ்ஞை—மஞில் என்ருகிப் பின் ஞகரமும் யகரமும் இடையண்ண எழுத்தாகளின் ஞகரம் யகரமாகி மயில் என வந்துள்ளது இதன் வேர்ச்சொல் 'மஞ்' என்னும் இசைக்குறிப்பாகும்.

விடை 2:- செவி—தமிழ். சகரமெய் கன்னடத்தில் ககர மெய்யாகப் பெறுதல் உண்டு 'செவி' என்பது எப்பொழுதும் செவ்வியாக (தயார் நிலையில்) இருப்பது என்னும் பொருளுடையதாகும், இதன் வேற்சொல் 'கெவ்' என்பதாம்.

விடையெழுதியவர்.
பேராசிரியர். ச. பாலசுந்தரம்.

வினா: (3) சாரியைச் சொற்களுக்குப் பொருள் உண்டு என்பார் சிலர், இல்லை என்பார் சிலர் தங்கள் கருத்தென்ன?

வினா: (4) திராவிட மொழிகளின் முதன்மொழி 'தமிழ்' அன்று என்று தற்கால மொழிநூல் ஆசிரியர்கள் குறிப்பிடு கிருர்கள் தங்கள் விடை என்ன?

சு. இராசேசுவரன்,
துணைப்பேராசிரியர்,
த. பே. மா. லூ. கல்லூரி,
பொறையாறு.

விடை: (3) சாரியைச் சொற்களுக்குப் பொருள் உண்டு. அஃது இருவகைப்படும். ஒன்றுதான் சார்தலான் சொல்லைச் செம்மைப்படுத்தல். இரண்டு சார்ந்த சொற்பொருளை வேறுபடுத்தல், எ.டு. நட என்னும் முதனிலை அன், ஆன், என்னும் இறுதிநிலை பெறுங்காலத்து அன் விகுதி ஒர் அன் சாரியை பெறும் நடத்தனன் ஆன் விகுதி சாரியை பெருது. அன் விகுதி சாரியை பெரு விடின் சொல்லுருவம் செம்மையுருது. அடுத்து. எல்லாம் என்னும் சொல் எல்லாம் தம்மையும் எனச் சாரியை பெறின் நிலைமொழி உயர்த்திணை என்பதும் எல்லாவற்றையும் எனவற்றுச் சாரியை பெறின் நிலைமொழி அஃறிணை என்பதும் புலப்படும்

சித்திரை என்னும் சொல் சித்திரையாற் கொண்டான் ஏன ஆன் சாரியை பெற்றவழி நிலைமொழி நாட் (விண் மீன்) பெயர் என்பதும் சித்திரைக்குக் கொண்டான் என இக்குச் சாரியை பெற்றவழி நிலைமொழி திங்கட் பெயர் என்பதும் புலனும் அதனுன் ஆசிரியர் தொல் காப்பியர் சாரியை பொருள் நிலைக்கு உதவும் என்று கூறுகிருர் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு தருவும் (இடை. சூ. 2) என்பது விதி. மேலும்
''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே''
என்பது ஆசிரியரது ஐயமில் கூற்ருகும்

விடை: (3) திராவிட மொழிகளில் முதன்மொழி தமிழ் தென்னிந்திய மொழிக் குடும்பங்களைச் சுட்டுதற்கு வேறுசொல் இன்மையின் ''திராவிடம் என்பதனைக் குறியிட்டுச் சொல்லாகக் கொள்வதாகக் கால்டுவெல் கூறுகின்ருர்.

திராவிடம் என்ற சொல்லே தமிழ்எனப் படிப்படியாகத் திரிந்ததென்பது அவர் கொள்கை. தமிழ் என்பதே திராவிடமெனத் திரிந்தது என்பது பலர் கொள்கை

எவ்வாருயினும் தமிழ் என்பதும் திராவிடம் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கின்றன என்பதில் கருத்துவேறுபாடில்லை பின்னர்த் தமிழே மூலமொழி என்ருல் வேறுபடுவானேன்? வேறுபடுதற்குக் காரணம் தமிழர்கள் தலைமை பெருமையும், தெலுங்கு கன்னடம், மலையாளம் முதலிய மொழியாளர்கள் தம் சிறப்புக் குறையும் என்று கருத வேண்டாமையும்மேயாகும். தமிழே மூலமொழி என்பதற்குச் சான்று எழுத்து நெடுங்கணக்கும் — இலக்கண அமைப்புமாம். மேலும் கன்னடம் தெலுங்கு முதலிய மொழிகளில் உள்ள ஆரியம், புராகிருதம் ஆகிய சொற்களை நோக்கிஞல் அவை சிறிது திரிந்த தமிழ்ச் சொற்களாகவே இருத்தலைக் காணலாம்

இது மதிப்புப் பற்றிய சிக்கல்களால் நேர்ந்த குறைபாடாம்

விடை யெழுதியவர்:
பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

வினு (5) ஆர்க்காடு — ஆற்காடு இவ்விரண்டில் திருத்தமுடைய பெயர் யாது? விளக்கம் தருக

இரா. இளவழகன்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

ஆர்க்காடு என்பதே திருத்தமான பெயராகும். ஆற்காடு என்று எழுதுவது பிழை. ஆர்க்காடு என்பதை ஆர்—காடு எனப் பிரிக்க வேண்டும் ஆர் மரங்கள் நிறைந்த காடு ஆர்க்காடு எனப்படும். சோழன் கரிகாற் பெருவளத்தான் காடு கொன்று நாடாக்கிய செயலைப் பட்டினப்பாலை வாயிலாக தாம் அறிகிறோம். ஆர்க் காட்டை அழித்துச் செய்யப் பெற்ற ஊரும் ஆர்க்காடு என்று சொல்லப்பட்டது.

சோழனுக்குரிய அடையாளப் பூமாலை ஆத்திப் பூமாலையாகும். ஆத்திமரம் ''ஆர்'' எனவும் கூறப்படும். ''போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெருந்தானை

மலைந்த பூவும்'' என்பது தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பா

''ரகரர இறுதி யகார இயற்றே''

(தொல். எழுத்து 373)

என்னும் நூற்பா விதிப்படி ஆர்க்கோடு, ஆர்ச்செதில், ஆர்ப்பட்டை எனவரும்.

''ஆரும் வெதிறும் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்ப்பெறத் தோன்றும்

(தொல். எழுத்து. 363) என்னும் விதிப்படி ''ஆர்ங் கோடு, ஆர்ஞ்செதில், ஆர்ம்பட்டை எனவும் வரலாம். ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்'' என்ஞர்போலச் சிறு பான்மை ஆர் என்னும் கிளவி அம் சாரியை பெறுதலும் உண்டு.

ஆல் என்னும் மரப்பெயர்க் கிளவி அம் என்னும்சாரியை பெற்றே வருமொலியுடன் புணரும் என்பதனை

''பூல்வேல் என்ரு ஆலென்கிளவி யொடு
ஆமுப் பெயர்க்கும் அம்பிடை வருமே''

(தொல். எழுத்நு· 376)

என்னும் நூற்பா விளக்கும்.

அதனுல்தான் ஆல்—அம்—பழம் = ஆலம்பழம் என்று ஆகின்றது, ஆலங்குடி, ஆலக்குடி, திருவாளங்காடு, திருவாழம்பொழில் என்னும் ஊர்ப்பெயர்கள் அணைத்தி லும் ஆல் என்னும் மரப்பெயர்ருடன் அம் சாரியை சேர்ந்தே வந்துள்ளது காண்க. ஆல் என்னும் மரப் பெயர் அய் சாரியை பெருது வந்தவிடம் ஒன்றுமில்லை. எனவே, ஆல மரம் நிறைத்த காடு ஆலங்காடு என்று தான் ஆகுமே தவிர ஆற்காடு என்று ஆகாது என்பது தெளிவு. ஆகவே, ஆற்காடு என்று எழுதுவது பிழை. ஆர்க்காடு என்று எழுதுவதே திருத்தமுடையது. இதனை மறைந்த ஆராய்ச்சிப் பேறரிஞர் மயிலை சீனி. வேங்கட சாமி அவர்கள் தமது கட்டுரை நூலொன்றில் தெளிவு படுத்தி யிருக்கிருர்கள்.

விடை எழுதியவர்:
பேராசிரியர் வி. விருத்தாசலம்,

—(0)—

சோழர் கல்வெட்டில்
சில கலைச் சொற்கள்

கு, அழகேசன். எம் ஏ; எம், ஃபில்.

தென்னிந்திய கோயில் சாசனங்கள், தென்னிந்திய சாசனங்கள், அனைய பிறவற்ருல் வெளியிடப்பட்ட சோழக் கல்வெட்டுகளின் எண்ணிக்கை 3543, இன்னும் வெளிவராதவை 7000 பதிப்பிக்கப்பட்ட சோழக் கல்வெட்டுகளின் துணையால் அரசு நிர் வா க ம் ' தமிழ் வழி ' அனைத்துத்துறைகளேயும் உ அடக்கி மிளிர்ந்ததை நன்கறிய இடமுண்டு.

தமிழ்வழி எல்லா கருத்துக்களையும் வெளியிட முடியாது என்னும் கூப்பாடு 1962 ஜீன் மாதம் வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கையாலும் அதன் பின்னர் வெளிவந்த சென்னைப் பல்கலைக் கழக செனட் சபையாலும் பொய்யாக்கப் பட்டாலுங் கூட, வரலாறு கணிதம், தத்துவம், மானிடவியல், இலக்கியம், பொருளாதாரம், விஞ்ஞானம் அனைய ஒன்பது துறைகளுக்கு வேண்டிய பத்தாயிரம் கலைச் சொற்களை உருவாக்கம் செய்வதற்கு ராஜாஜி காலத்தில் கால்கோள் செய்யப்பட்டது. ஆகவே, இலக்கியங்கள் வழி யா ன் ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் கலை'ச்சொற்களைத் தொகுத்தும் இல்லையெனில் தயாரித்தும் வெளியிட்ட மூதறிஞர்குழு பரி ந்து உரைத்தது.

ஊசிசெயும் சிறுதொழிலின் நுப்ம் முதல்
... ...
... ... அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகலெல்லாம் தமிழில் எண்ணி
பேசும் மகிழ்நிலை' —வ ந் த து. அதன் பி ன் ன ர் தமிழ்வாணர்கள் கலை சொற்களைத் தொகு த் து ம் தயாரித்தும் தன்னேரில்லாத தமிழாக்கினர். பாரதி கூறியது போல' பயிற்றிப் பல கல்வி தந்து' —இந்தப் பாரினை உயர்த்திட விழைந்தனர். இத்தகைய சீரிளமைத் திறம் வியந்த கலைச்சொற்கள் பொருள் இனிமையை, கருத்தாழத்தை. சொல் ஆளுமையை சோழர் கல்வெட்டுகளில் தோழமை கொ ண் டு இக்கட்டுரைச் சுருக்கமாகக் கூற விழையும்.

கலைச் சொல்சாயல்:—

அன்றாடம் வளர்ந்து வரும் அறிவியல் உள்ளிட்ட பிறதுறைகளுக்கான குறியீடுகள், அவற்றிற்குரிய பெயர்முறைகள்—தமிழில் முற்ற முழுக்க இல்லையென்றாலுங் கூட அவற்றிற்குறிய சாயல்கள்

துளியளவும் தமிழிலோ, கல்வெட்டுகளிளோ இல்லையெனில் மெய்யாகாது. சோழர் கல்வெட்டுகளைப் பார்க்குமிடத்து இக்கருத்து ஒருவாறு நியாயப் படும்.

செயல் முறை நடவடிக்கைகள்:—

ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகள் ஒவ்வொரு பேரரசின் கண்ணும் வகை தொகைப் பட்டாலுங் கூட சோழராட்சியில் தான் அவை செழிப்புற்றன, அவர்கள் வகுத்துப் போந்த நாட்டுப் பகுப்புக்களான ஊர்கள், நாடுகள் வளநாடு, கூற்றங்கள், மண்டலங்கள்—அனைய பிறவற்றை வெளிப்படுத்தக் கையாண்ட கலைச்சொற்கள் வழி அரசு நிர்வாகத்தினது செயல்முறை நடவடிக்கைகள் நமக்கு மேலும் பல தெளிவைத் தருகின்றன. பிற மொழிக் கலப்பினைப் பெரிதும் பின்பறாமல் குறிக்க வேண்டிய பெயர்களை அல்லது பொருளுக் குறிய கலைச் சொற்களை தமிழ்வழிப் புலப்படுத்திய நெறியை எழுநூறு ஆண்டுகட்கு முன்னரே சோழர்களது சாசனங்களைக் காணும் போது சொற்களின வளமும் அதனால் மொழியின் பெருமையும் விளக்கமுறும்.

அரசவை நிர்வாகத்தில் கலைச் சொற்கள்:—

அரசவையின் வருமானம் ஒழுங்கு படுத்தப் பட்டு 'பஞ்சவார ஆறிடு வாரியம்'—போன்ற வாரியங்களால் கவனிக்கப் பட்டு வந்ததென்பதற்கு சில கலைச் சொற்கள் சான்றுக்கு உண்டு. தோட்ட வாரியம், பொன்வாரியம், புரவுவரித் திணைக் களம், முகவெட்டி காரிய ஆராய்ச்சி, புரவுவரித் திணைக் களகண்காணி தெரிப்பு, ஓலை நாயகம்' வரிப் பொத்தகக் கணிஅரசாணை, உடன் கூட்டத்தார். தரவு சாத்து ஆகிய கலைச்சொல் வடிவங்களால் சோழரின் உயர் அலுவலர் குழுவைப் பற்றியும் அவற்றின் ஊர்ச் சபை நிர்வாகம் பற்றிய செய்திகளையும் காணலாலாம், மொழிக் கலப்பில்லாமல் எண்ணிறந்த கலைச் சொற்களை ஆளுமை படுத்தியமைக்கு எண்ணிறந்த கலைச்சொல் வடிவங்கள் சான்றுண்டு.

விரிப்பின் பெருகும். இருப்பினும் கோயில் சம்பந்தப்பட்ட சில கலைச் சொல் வடிவங்களைக் காணல் வேண்டும். சோழர் காலத்தில் ஏதேனும் ஒரு கருத்து அல்லது பொருளைக் குறிக்க தமிழால் ஆகாது என்றெண்ணி பிற மொழிக்குறிய சொல் வடிவங்களை பெரும்பாலும் பற்றாமல் தமிழ்ச்சொற்களாலே குறிப்பிட—புழக்கத்தில் விட அவர்கள் விழைந்ததைக் கீழ்க் காணும் சொற்கள் வழிப் புலப்படுத்தும்,

(தொடரும்.)

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேராசிரியர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
துணை முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
பேராசிரியர் (ஓய்வு)
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
முதநிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரனார் மேனிலைப் பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்,** பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்;
பொழிற்றொண்டர்.

***

Regd No. TN/TJ/17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20—00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	.... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	.... 003—00
ஆயுள் வரி	... 100—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—50
கவியரசு நினைவுமலர்	1—00
வெமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்பு அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.